# ஆண்டறிக்கை

# 2016

## வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி

**தலுப்பிட்டிய வீதி, ஹுனுப்பிட்டிய, வத்தளை**

**தொலைபேசி : 011-2948102/03, 011-2941859**

**தொலைநகல் : 011-2930252, 011-2949126**

**மின்னஞ்சல் : ccffinance@yahoo.com**

**இணையத்தளம்: www.ccfl.gov.lk**

| | உள்ளடக்கம் | பக்க இல |
|---|---|---|
| **1** | **நிறுவனத் தகவல்கள்** | |
| 1.1 | தொலைநோக்கும் செயற்பணியும் | 01 |
| 1.2 | எமது கம்பனியின் பெறுமதிகள் | 02 |
| 1.3 | எமது பயணத்தின் முக்கியமாக கட்டங்கள் | 03 |
| 1.4 | தலைவரின் மீளாய்வு | 05 |
| 1.5 | கம்பனியின் ஒழுங்கமைப்பு வரைபடம் சிரேஷ்ட ஆளுகை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு | 07 |
| 1.6 | பணிப்பாளர் சபையும் நிர்வாக சபையும் | 08 |
| 1.7 | நிறுவனத்தின் நல்லாளுகை | 09 |
| | | |
| **2.** | **இடர் முகாமைத்துவம்** | 11 |
| | | |
| **3.** | **செயலாற்றல் தரவு** | 14 |
| | | |
| **4** | வெற்றிகரமான எதிர்கால நோக்கு | 17 |
| | | |
| **5.** | கம்பனியின் தரப்பினர்களுக்காக கம்பனியின் பங்களிப்பு | 18 |
| | | |
| **6** | உர விநியோகத்தின் செயற்பாடுகள் சுருக்கமாக | 19 |
| | | |
| **7** | கம்பனியின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு | 22 |
| | | |
| **8.** | **நிதி அறிக்கையிடல்** | |
| 8.1 | பணிப்பாளர் பொறுப்புக்கூறல் கூற்று | 24 |
| 8.2 | தலைவரினதும் நிதி முகாமையாளர்களினதும் பொறுப்புக் கூற்று | 25 |
| 8.3 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை | 26 |
| 8.4 | விபரமான வருமானக் கூற்று | 37 |
| 8.5 | நிதி நிலைமைக் கூற்று | 38 |
| 8.6 | உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று | 39 |
| 8.7 | காசுப்பாய்ச்சற் கூற்று | 40 |
| | • நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்கள் | 41 |
| | | |
| **9.** | **கூட்டமைப்புத் தகவல்கள்** | 69 |

**1.1**

## தூர நோக்கு

“கமநலத்திற்கு அவசியமான பொருட்களையும்
சேவைகளையும்
தாமதமின்றி உற்பத்தி செய்து விநியோகிப்பதில்
இலங்கை கமநலத் துறைக்கு சாதகமான முறையில்
பங்களிப்பைச் செலுத்துவதன் மூலம்
அரசாங்கத் துறையில் உள்ள முன்மாதிரியான
நிறுவனமாக செயற்படுதல்”

## செயற்பணி

இலங்கையில் முன்னனி உர உற்பத்தியாளராகவும்
விநியோகத்தராகவும் திகழ்ந்து
அரசாங்கத்தின் கமநலத்திற்கான தூர நோக்கில்
பெருமைவாய்ந்த உரிமையாளராக
உற்பத்தியைப் பரவலாக்கி,
உயர் தரத்திலான உற்பத்தியை வெளிப்படுத்தி,
நிறுவகத் தரப்பினரின் தேவைப்பாட்டிற்கு
ஏற்றவகையில் செயற்பட்டு
சுதந்திர நிறுவகமாக செயற்படுவதற்கான
சந்தர்ப்பத்தை உருவாக்குதல்

## 1.2 எமது கம்பனியின் ஒழுக்க விழுமியங்கள்

| நேர்மைத்தன்மை | பொறுப்பு | பரஸ்பர மரியாதை |
|---|---|---|
| எல்லாச் சந்தர்ப்பங்களிலும் திறந்த மனதுடன் செயற்படல் மற்றும் ஒழுக்க விழுமியங்களுக்கு கட்டுப்படல். | எமது அனைத்து செயற்பாடுகளுக்கும் உறுதிகளுக்கும் பொறுப்புக் கூறல். | ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்தல், சமத்துவம், தனி நபர் அபிவிருத்தியை ஊக்குவித்தல் மற்றும் முன்னேற்றங்களை அங்கீகரித்தல். . |

| சிறந்த பிரஜை | தரம் | குழு முயற்சி |
|---|---|---|
| சட்டத்திற்கு அடிபணிதல், சமூக நலனுக்காக பங்களிப்புச் செய்தல் மற்றும் நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்குமான சூழல் பொறுப்பு. | நிறுவனத்தின் அனைத்து கருமங்களிலும் முடிவுகளிலும் உயரிய தரத்தினை பாதுகாத்தல். | நிறுவனத்தின் பொது இலக்காகிய ‘‘முன்னேற்றம்’’ நோக்கி கூட்டாக பயணிப்பதற்கான தனிப்பட்ட ஈடுபாடு. |

## 1.3 எமது பயணத்தின் முக்கியமான கட்டங்கள்

**1872**

- இலங்கையில் தனது வியாபார நடவடிக்கைகளை பேணிச்செல்லும் வகையில் கம்பனி பெரிய பிரித்தானியாவில் கூட்டிணைக்கப்பட்டது.

**1976**

- 1971 இன் 35 ஆம் இலக்க வியாபாரத்தை கையளிக்கும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கம்பனி இலங்கை அரசினால் பொறுப்பேற்கப்பட்டது.
- கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி அரசிற்கு பொறுப்பேற்கப்பட்டதன் பின் அரசாங்க வியாபாரமாக கொண்டு நடாத்தப்பட்டது.

**1989**

- 1987 இன் 23 ஆம் இலக்க அரச கூட்டுத்தாபன மற்றும் வியாபாரங்கள் பொது வியாபாரமாக மாற்றும் சட்டத்திற்கு இணங்க கம்பனி பொது வியாபாரமொன்றாக மாற்றப்பட்டது.
- கம்பனியின் பெயர் பெயர் வ/ப கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி என மாற்றப்பட்டது.
- கம்பனியின் முழு பங்கு உரித்தும் அரசிற்கு சொந்தமாக இருந்தன.

**1994**

- அரசினால் மேற்கொள்ளப்பட்ட தனியார் மயப்படுத்தல் கொள்கையின் பிரகாரம் கம்பனி தனியார் மயப்படுத்தப்பட்டது. கம்பனியின் பங்கு மூலதனத்தில் 90% தனியார் முகாமைத்துவத்திற்கும் எஞ்சிய 10% பொது திறைசேரிக்கும் உரித்தாகின. எனினும் நிர்வாக செயற்பாட்டில் ஏற்பட்ட சிக்கல் மற்றும் ஊழியர்களின் கடும் எதிர்ப்பினால் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் இரண்டு வருட காலமாக தடைப்பட்டிருந்தது.

**1997**

- 1996 இன் 23 ஆம் இலக்க பொது முயற்சிகளை மீளமைத்தல் அதிகாரச்சட்டத்தின் கீழ் தகுதி வாயந்த் அதிகாரியொன்றை அதிமேதகு சனாதிபதியால் நியமிக்கப்பட்டு திறைசேரியால் மீள கையேற்கப்பட்டது.

- கம்பனியின் தலைமையகம் யூனியன் பிளேஸ் என்ற இடத்திலிருந்து தற்போதைய இடமான வத்தள ஹுணுப்பிட்டியக்கு கொண்டு செல்லப்பட்டது.

**2005**

- மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் மானிய விலைக்கு உர விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.

**2010**

- ஏனைய பயிர் செய்கைகளுக்காக மானிய உர விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.

**2011**

- தகைமை வாய்ந்த அதிகாரியின் கட்டுப்பாட்டில் இருந்த கம்பனியின் நிர்வாகம் பணிப்பாளர் சபையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

**2016**

- அரசினால் பெப்ரவரி மாத இறுதியில் தற்போதைய உர மானிய முறைமைக்குப் பதிலாக மாற்று நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் கம்பனி போட்டியுடனான திறந்த சந்தையில் நுழைந்து வியாபாரத்தை மேற்கொண்டு வந்தது.

## 1.4 தலைவரின் மீளாய்வு

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியின் பணிப்பாளர் சபைக்காக 2016 மார்ச் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான அறிக்கையை நான் இவ்வாறு சமர்ப்பிக்கிறேன்.

**<u>கம்பனியின் செயலாற்றல்</u>**

2016 மார்ச் 31 முடிவடைந்த நிதி ஆண்டிற்காக நிறுவனம் ரூபா 180 மில்லியன் தேறிய இலாபத்தினை ஈட்டியுள்ளது. வருடத்தினுள் 185,273 மெ.தொன் உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன் 113,067 மெ.தொன் உரம் நெற் பயிர்ச்செய்கைக்காகவும், 50,774 மெ.தொன் உரம் ஏனைய பயிர்களுக்காகவும் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் வருடத்திற்கான உற்பத்தி ரூபா 1840 மில்லியனாகும்.

ஹுனுபிடிய பிரதான களஞ்சியசாலை மற்றும் 18 பிராந்திய களஞ்சியசாலைகளினூடாக மானிய உரத்தினை விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் வழங்குவது எமது நிறுவனத்தின் பிரதான பொறுப்பாகும். அரசின் சலுகை விலை உரத் திட்டத்தின் கீழ் பொறுப்பு வாய்ந்த கடமையினை மேற்கொண்ட எமது நிறுவனத்தின் சந்தைப் பங்கு 35% வீதமாகும்.

கடந்த வருடம் விவசாயத்திற்கு உகந்த ஒரு காலமாக இருக்கவில்லை. நிலவிய மோசமான காலநிலை அதற்கான காரணமாகும். வருடத்தின் நெல் உற்பத்தி 8.3% இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும் தேயிலை, தென்னை, இறப்பர் உற்பத்தி முறையே 11%, 10.7%, மற்றும் 1.5% இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. இதேவேளை நிதி வருடத்தின் இறுதியில் நடைபெற்ற சலுகை விலை உரத் திட்டம் எமது நிறுவனத்தில் நேரடியாக தாக்கம் செலுத்தியதுடன் அதன் பிரதிபலனாக தனது விற்பனைகளை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு திறந்த சந்தையில் ஏனைய பல் தேசிய நிறுவனங்களுடன் போட்டி போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நிறுவனத்தின் தரக்கணிப்பு கடந்த வருடத்தில் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியடைந்தது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் நிறுவனத்தின்வரிக்குப் பின்னான இலாபத்தில் 63% வீழ்ச்சியை அவதானிக்கலாம்.

**<u>நேரிய எதிர்கால இலக்கு</u>**

உறுதியான நிதி நிலைமையினைக் கொண்டிருத்தல், நூறாண்டுகள் தொடர்ச்சியான தொழில்சார் திறன், சக்தி வாய்ந்த மனித வளம் மற்றும் அரசின் உறுதியான உந்துசக்தி ஆகியன எமது நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்கின.

விவசாய உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக அரசினால் விசேட வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2016 மார்ச் மாத ஆரம்பத்தில் ''நன்மை பயக்கும் விவசாயம் - ஆரோக்கியமான சமூகம் - நச்சு விசமற்ற நாடு'' எனும் அரசின் மூன்றாண்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் இலங்கையின் விவசாய உற்பத்திகளை உலக சந்தைக்கு ஏற்றதாக மாற்றுவதற்கான 23 விவசாய அபிவிருத்தி வலயங்களை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை நவீன தொழில்நுட்பத்தின் கீழ் நெல், சோளம், எள்ளு, மிளகு மற்றும் உழுந்து ஆகிய பயிர்களை உற்பத்தி செய்வதற்கு தானியக் களஞ்சியங்களை நிறுவுதல், மரக்கறி மற்றும் பழ வகைகளை களஞ்சியப்படுத்துவதற்காக குளிர் அறைகளை அமைத்தல், விவசாய இயந்திரங்களுக்கான இறக்குமதித் தீர்வையை நீக்குதல் ஆகிய வரவு செலவு ஆலோசனைகளும் அரசினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய பின்னணியில் இலங்கையின் விவசாயக் கைத்தொழில் துறையின் எதிர்காலம் வெற்றியளிக்கப் போவது தெளிவாகின்றது. அதேபோன்று அத்தகு புதிய சந்தர்ப்பங்களுக்கு அமைவாக உபாயங்களை திட்டமிட்டுள்ள எமது நிறுவனத்தின் வெற்றியும் எமக்கு உறுதியானதாகும்.

கொம்போஸ்ட் உர உற்பத்தி மற்றும் விநியோகம் நடுகை முறை உற்பத்தி, வளம் மிக்க உரத்தினை உற்பத்தி செய்தல் போன்ற துறைகளில் எமது நிறுவனம் தற்பொழுது கூடிய கவனம் செலுத்துகின்றது. தேயிலை உரத்திற்காக கலவன் உரத்தை வழங்குவது தொடர்பான வரவேற்பு எமது நிறுவனத்திடம் எப்பொழுதும் இருந்து வந்துள்ளது.

எம்மிடமுள்ள அனுபவத்தினைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை பிரிவினை மையமாகக் கொண்டு கலவன் உர விற்பனை தொடர்பாக கூடுதல் அவதானத்தை செலுத்துவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். எம்மிடமுள்ள மற்றொரு திட்டமானது பயிர் நிலங்களின் மண் மாதிரிகளைப் பரிசோதித்து அவற்றில் குறைபாடாகக் காணப்படும் கணிய வகைகளை சேர்த்து அப்பயிர் நிலங்களுக்கான விசேட உர வகைகளை விநியோகிப்பதாகும்.

**நன்றி**

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை சார்பில் எமது நிறுவனத்தின் ஊழியர்களுக்கு இவ்வேளை நான் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். அவர்களது முயற்சி, முழுமையான அர்ப்பணிப்பு மற்றும் செயற்றிறன் ஆகியன எமது நிறுவனத்தை மேலோங்கச் செய்ய உதவியது.

நிறுவனத்தின் நோக்கங்களை அடைகையில் பணிப்பாளர் சபை பெற்றுக்கொண்ட ஒத்துழைப்பும் பங்களிப்பும் மெச்சத்தக்கதுடன் தேசிய உர செயலகத்தின் பணிப்பாளர் உட்பட ஊழியர்கள் பெற்றுக்கொடுத்த ஒத்துழைப்புக்கும் வழிகாட்டலுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

அதேபோன்று கௌரவ விவசாய அமைச்சர், அமைச்சின் செயலாளர், அமைச்சின் ஊழியர்கள், கமநல சேவை ஆணையாளர் நாயகம், கமநல சேவை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எமது நிறுவனத்திற்குப் பெற்றுக்கொடுத்த ஒத்துழைப்பிற்காக அதிகம் நன்றி தெரிவிக்கின்றேன்.

மேலும் எமது இறக்குமதி விலைப் பட்டியல்களை உரிய காலத்தில் செலுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய திறைசேரி பணிப்பாளர் நாயகம் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இறுதியாக எமக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து வங்கி ஊழியர்கள் மற்றும் எமது நிறுவனத்தின் அனைத்து தரப்பினருக்கும் எனது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சமிந்த குமார லியனகே**

**தலைவர்**

**வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி**

## 1.5 கம்பனியின் நிறுவகக் கட்டமைப்பு



## 1.6 பணிப்பாளர் சபை

**•வுகை பணிப்பாளரின் பெயர்**
•தலைவர் - திரு. சமிந்த குமார லியனகே
•நிறைவேற்றுப் பணிப்பாளர் - திரு. நீல் நாணயக்கார
•பணிப்பாளர் - திரு. டபிள்யூ. கே. டீ. ரீ. வராகொட
•பணிப்பாளர் - திரு. எஸ். எல். சந்திரசிரி
•பணிப்பாளர் - திரு. ரீ. மலித் பெரேரா
•பணிப்பாளர் - திரு. பீ. ஏ. எஸ்.ஏ.குமார
•பணிப்பாளர் - திரு. டீ. எச். எல். சில்வா
•கம்பனி செயலாளர - திரு. எஸ். பீ. மொறவக்க (சட்டத்தரணி)

**•கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**
•தலைவர் - திரு. பீ. ஏ. எஸ். ஏ. குமார (பணிப்பாளர் - பொது திறைசேரி)
•உறுப்பினர் - திரு. எஸ். எல். சந்திரசிரி (பிரதான கணக்காளர், விவசாய அமைச்சு)
•உறுப்பினர் - திரு. ரீ. மலித் பெரேரா (பணிப்பாளர் சபை உறுப்பினர்)
•அவதானிப்பாளர் - திருமதி. சுனந்தா பத்மினி (கணக்காய்வு அத்தியட்சகர்)
•அவதானிப்பாளர் திரு. பீ. எல். நாமசேன (பிரதான உள்ளக கணக்காய்வாளர். விவசாய அமைச்சு)
•அழைப்பாளர் - திரு. எச். வீ. ஏ. ஜே. விஜேசிறி (உள்ளக கணக்காய்வாளர்)

**சிரேஷ்ட முகாமைத்துவக் குழு**
பொது முகாமையாளர் - பேராசிரியர் திரு. டப்ளியு.எம்.ஜயந்த வீரரத்ன
நிதி, நிர்வாக முகாமையாளர் - திரு. எஸ்.என்.ஜே.விக்ரமசிங்ஹ
தயாரிப்பு மற்றும் விநியோக முகாமையாளர் திரு. ஜே. சீ. விக்ரமசிங்ஹ
கொள்வனவு, வழங்கல் முகாமையாளர் திரு. கே. கே. சோமசுந்தரம்
உள்ளகக் கணக்காய்வாளர் - எச். வீ. ஏ. ஜே விஜேசிறி

## 1.7 நிறுவன நல்லாளுகை

அரச தரப்பிற்குச் சொந்தமான எமது நிறுவனத்தில் அனைத்து செயற்பாடுகளினதும் அடிப்படை எம்மிடம் பொதிந்துள்ள நிறுவனத்தின் நல்லாளுயாகும். நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகின்ற சகல சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளுடன் கூடிய கட்டுப்பாட்டு ஒழுங்கு, நிறுவனத்தின் நல்லாட்சியாகும் என சுருக்கமாகக் கூறலாம். எமது நிறுவனத்திற்கு விதிக்கப்பட்டுள்ள அனைத்து சட்டதிட்டங்களுக்கும் அமைவாக நிறுவனத்தின் அனைத்து தரப்பினரினதும் கருத்துக்களை சமப்படுத்தும் செயற்பாட்டில் எமது நிறுவன நல்லாட்சி அதன் பிரதான தொழிற்பாட்டினை மேற்கொள்கின்றது. எமது நிறுவனத்தினால் அரசு பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. இதனால் சிறந்த நிறுவன நல்லாளுகையை நடைமுறைப்படுத்துவது எமது பிரதான பொறுப்பாக உள்ளதுடன் அதற்காக அதிக முயற்சியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது எமது நிறுவனத்திற்கான பிரதான சவாலாகும். இதனால் நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளும் நடைமுறையிலுள்ள ஒழுக்க விதிமுறைகளுக்கு முற்றிலும் உட்பட்டுள்ளதாகவும் அவை நிறுவனத்தின் வளர்ச்சிக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுவதாகவும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை எப்பொழுதும் உறுதி அளிக்கின்றது.

**வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் கூட்டமைப்பு ஆளுகையின் பணிக் கட்டமைப்பு**



## 1.8 நிறுவனத்தின் நல்லாளுகை நோக்கி கம்பனியின் பங்களிப்பு

**சபை கூட்டங்கள்**

- கடந்த ஆண்டில் அறிக்கை ஆண்டின் போது 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**பதவியணியனர் தேவைப்பாடு**

- பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கமைய சகல பதவியணித் தேவைப்பாடுகளும் பதவி உயர்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**கொள்கை தீர்மானங்கள்**

- சகல கொள்கைத் தீர்மானங்களும் தயாரிக்கப்பட்டு பாரிய உபாயமார்க்கங்கள் சபை அறையில் கலந்துரையாடப்படுகின்றன.

**முக்கியமான விடயங்கள்**

- மிகவும் நெருங்கிய ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய சகல முக்கிய விடயங்களும் முகாமைத்துவக் குழுவிற்கு தொடர்புபடுத்தப்படுகின்றன.

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்**

- மீளாய்வாண்டின் போது 06 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**விரிவான திட்டங்களும் தொழில் திட்டங்களும்**

- நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவுகள் வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்காக நிறுவகத்தின் திட்டம் உயர்மட்ட முகாமைத்துவத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

## 2. இடர் முகாமைத்துவம்

இடர் முகாமைத்துவம் எனப்படுவது இடரை எதிர்வுகூறுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் அவ்வாறான தாக்கங்களை குறைப்பதற்கு வெவ்வேறு நடைமுறைகளை இனங்காணும் செயற்பாடாகும். அனைத்து இடர்களையும் தவிர்த்தலின் பெறுபேறு எவ்வித முன்னேற்றமொன்று அல்லது எவ்வித வெற்றியாக இருக்க முடியாது அதனால் கம்பனியின் இடர் முகாமை தந்திரோபாயம் பணிப்பாளர் சபையின் அவ்வப்போதைய மேற்பார்வைக்கு உட்படுவதுடன் இடர்களைக் குறைப்பதற்கு போதியளவு உள்ளக கட்டுப்பாட்டு முறமையொன்று முறையாக தயாரித்தல் கம்பனியின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. விதிக்கப்பட்டுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை முறையாக பின்பற்றுகின்றதா என உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் சாதாரண மற்றும் விசேட புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குறைபாடுகள் இருந்தால் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்படும்.



எமது கம்பனியால் முகங் கொடுக்கும் பிரதான இடர் இவ்வாறு சுருக்கமாக காண்பிக்கலாம்

| **நிகழ்தகவு** | *சிறிய* | *நடுத்தர* | *உயர்* | *மிகவும் கூடிய* |
|---|---|---|---|---|
| *உயர்ந்த* | | | **2 ,9** | **5,8** |
| *மத்திய* | | | **3,15** | **1 ,4 ,6 ,10 ,14** |
| *சிறிய* | **7** | | | |
| *மிகவும் சிறிய* | | **11** | **13** | **12** |

**தடவைகள்**

| *அணி இல* | *அபாயம்* | அபாயத்திற்கான பரிகாரம |
|---|---|---|
| **01** | உலக சந்தையில் உரத்தின் விலை அதிகரித்தல் | விலைத் தளம்பல்களை தொடர்ச்சியாக அவதானித்து சாதகமான விலை காணப்படும் சந்தர்ப்பத்தில் கொள்வனவு செய்தல் |
| **02** | அரச கணக்காய்விற்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதால் போட்டியாளர்களுடன் போட்டியிடும் போது பாவிக்கும் உத்திகளின் கட்டுப்பாடு | அரச கணக்காய்வு விதிகளுக்குள் அடங்காத உத்திகளை உச்ச அளவில் பயன்படுத்தலும் ஏற்றுக்கொள்ளலும் மற்றும் பொதுத் திரைசேரியினால் அனுமதிக்கப்படுவதற்கான நிறுவனம் குறித்த வழிகாட்டல்களை அபிவிருத்தி செய்தல் |
| **03** | இரசாயன உரப் பாவனையினால் ஏற்படும் மோசமான சுகாதாரப் பாதிப்புகள் காரணமாக வாடிக்கையாளர்களது கேள்வி குறையும் அபாயம் | சேதனப் பசளை சந்தையினைத் திறந்துவிடல். ஓவ்வொரு மண் வகையிலும் குறைபாடாகவுள்ள பசளைக் கூறுகளை மாத்திரம் சேர்த்து வெவ்வேறான கலவைகளை தயாரித்தல். |
| **04** | அரசாங்கத்தினால் வர்த்தகம் தொடர்பில் நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களில் திடீர் மாற்றங்களையும் புதிய சட்டங்களையும் அமுல்படுத்தல் | அரசாங்கத்தின் கொள்கைகளை அங்கீகரித்தலும் தொடர்ச்சியாக அவதானித்தலும் மற்றும் அதற்கமைவாக நிறுவனத்தின் உத்திகளை அமைத்துக்கொள்ளல் |
| **05** | உற்பத்திகளின் விலை அரசினால் கட்டுப்படுத்தப்படல் | |
| **06** | அரசாங்கத்தினால் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு கொள்வனவு் செய்யப்படாத குறைந்த சந்தை கேள்வியுடைய உர வகைகளை விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பம் | |
| **07** | விலைமனுக் கோரல் / பெறுவனவு செயன்முறைகளுக்காக மேலதிக காலம் செலவிடல் | |
| **08** | குறித்த காலத்தில் சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான முறையான ஒரு பொறிமுறை காணப்படாமையினால் மனித மற்றும் செற்பாட்டு வழுக்கள் ஏற்படல் | இந்த அபாயத்தினைத் தடுப்பதற்கு தரமான ஒரு கணனிமயப்படுத்தப்பட்ட முறைமையினை அறிமுகம் செய்தல் |
| **09** | தற்போதைய தரச் செயன்முறையில் வினைத்திறன் மற்றும் தரமான தொழிற்படு ஒழுங்குமுறைகள் காணப்படாமை | இந்த அபாயத்தினைத் தடுப்பதற்கு தரமான தொழிற்படு ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்தல் |

| *அணி இல* | *அபாயம்* | அபாயத்திற்கான பரிகாரம |
|---|---|---|
| **10** | மோசமான காலநிலை காரணமாக வாடிக்கையாளர்களது கேள்வி குறையும் அபாயம் | எதிர்பாராத காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தாங்கிக் கொள்ளும் வகையிலான நெகிழ்வினை உரவாக்கக்கூடிய முதலீடுகளை அங்கீகரித்தலும் பராமரித்தலும் |
| **11** | இலாபமடையும் நோக்கிலான திட்டமிடப்பட்ட ஏமாற்றுதல்கள், யுக்திகள் மற்றும் மோசடிகள் | மோசடிக்காரர்களின் ஊடுருவலைக் குறைக்கும் வகையில் மேம்படுத்தப்பட்ட உறுதியான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றினை பராமரித்தலும் ஒழுக்கவிழுமியமுள்ள கலாச்சாரத்தினை வளப்படுத்தலும் |
| **12** | நிறுவனத்தின் நிதித் தேவையினை சமாளிப்பதற்கான போதிய நிதி காணப்படாத அபாயம் | வருமானம் மற்றும் செலவினங்களை தொடர்ச்சியாக அவதானித்து தொடர்பு படுத்தலும் வங்கிகள் மற்றும் திரைசேரியுடனான உறுதியான உறவினை பேணுதலும் |
| **13** | கடன்பட்டோர் குறித்த காலப்பகுதியில் கடன்களை மீளச் செலுத்தாமையினால் ஏற்படும் இழப்புகள் | நீண்டகால கடன்களுக்காக சட்ட நடவடிக்கைகள் உள்ளடங்கிய உறுதியான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றினை பேணுதல் |
| **14** | வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுப் பெறுமதியில் மாற்றங்கள் ஏற்படும் அபாயம் | முக்கியமான உர வகைகளின் இறக்குமதி செலவினை அரசு ஏற்கின்றது. எனினும் ஒரு சிறு தொகை உரம் நிறுவனத்தின் செலவில் இறக்குமதி செய்யப்பட்டது. அப்படியான சந்தர்ப்பங்களில் அபாயத்தினைக் குறைக்கும் வகையில் வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகின்றன |
| **15** | வட்டி வீதத்தின் மாற்றங்களுக்கேற்ப நிறுவனத்தின் நிதி நிலைமைகளின் சாதகமான வெளிப்பாடு | இறக்குமதிப் பட்டியல்கள் அரசினால் செலுத்தப்படுவதனால் வட்டி வீதத்தினால் பாதிக்கப்படும் பிரதான பிரிவு முதலீடுகளாகும். இதனால் ஆபத்துக்களைக் குறைப்பதற்காக வட்டி வீதங்களைத் தொடர்ச்சியாகக் கண்காணித்தலும் வங்கிகளுடன் முதலீடுகளுக்காக கவர்ச்சியான வட்டி வீதங்களைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதும் அவசியமாகும். |

## 3. செயலாற்றல் குறிகாட்டிகள




***வருமானம்***

கடந்த 05 ஆண்டுகள் முழுவதும் கம்பனியின் வருமானம் தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் 2015∴16 ஆம் ஆண்டுகளில் கம்பனி தனது கூடிய விற்பனை வருமான ரூபா 1.8 பில்லியன் அறிக்கையிடப்பட்டிருந்தது.




அட்டவணை இல. 01 கம்பனியின் வருமானம் (ரூ.மி)

**மொத்த இலாபம்**

பசளை மானிய நிகழ்ச்சித்திட்டத்தில் இடம்பெற்ற வேறுபாடுகள் காரணமாக கம்பனி 2016 ஆம் ஆண்டில் மொத்த நட்டம் அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும் முன்னைய காலங்களில் கம்பனி தொடர்ச்சினா இலாபம் அறிக்கையிடப்பட்டிருந்தது.




அட்டவணை இல. 02 கம்பனியின் மொத்த இலாபம் (ரூ.மி)

**நிர்வாக செலவினம்**

கம்பனியின் வருடாந்த நிர்வாக செலவினம் ரூபா 115 மில்லியனாகும். கடந்த ஆண்டுடன் ஒப்பிட்ட போது அது 19% அதிகரிப்பாகும்




அட்டவணை இல. 03 கம்பனியின் நிர்வாக செலவினம் (ரூ.மி)

**விநியோக செலவினம்**

கம்பனியின் விநியோகச் செலவினம் ஆண்டில் 7% சதவீதம் குறைவடைந்துள்ளது. கம்பனியின் வியோகத்தளம் கருத்திற் கொள்ளக்கூடியளவு விரிவுபடுத்தப்பட்டிருக்கையில் வினைத்திறனான மற்றும் செயற்திறனான நிர்வாகத்தின் கீழ் விநியோகச் செலவினத்தை குறைப்பதற்கு முடியுமாக இருந்தது.




அட்டவணை இல. 04 கம்பனியின் விநியோக செலவினம் (ரூ.மி)

**நிதி வருமானம் மற்றும் செலவினம்**

ஆண்டில் நிதி வருமானம் ரூபா 71 மில்லியனாகும். நிலையான வைப்புக்கள் மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் செய்யப்பட்ட காலரீதியான முதலீட்டினூடாக இந்த மூலதன வருமானம் உழைக்கப்பட்டது.




அட்டவணை இல. 05 கம்பனியின் நிதிச் செலவினம் (ரூ.மி)

வரிக்கு முன்னரான இலாபம்

கடந்த காலப்பகுதிகளில் நிரந்தர இலாபகரான நிலைமையொன்றை பேணிச் செல்வதற்கு கம்பனிக்கு முடியுமாக இருந்தது. வட்டி வருமானத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்ற அதிகரிப்பு கம்பனியின் தேறிய இலாபத்தில் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. எவ்வாறாயினும் மானிய உர நடைமுறையில் இடம்பெற்ற வேறுபாடு கம்பனியின் இலாபத்திற்காக பாரிய தாக்கமொன்றை ஏற்படுத்தியிருந்தது.




அட்டவணை இல. 06 கம்பனியின் வரிக்கு முன்னரான இலாபம் (ரூ.மி)

## நிதி மீளாய்வு

| | | 2016 | 2015 | வேறுபாடு % |
|---|---|---|---|---|
| ***உழைப்பு பொழிப்பும் வீதங்களும்*** | | | | |
| **வருமானம்** | ரூ.மி. | 1,840.00 | 1,566.00 | 17.50 |
| *தொழிற்பாட்டு நடவடிக்கையினால் கிடைத்த இலாபம்* | ரூ.மி. | 185.00 | 378.00 | (51.06) |
| *வட்டிக்கு முன்னரான இலாபம்* | ரூ.மி. | 253.00 | 437.00 | (42.11) |
| *வட்டிக்கு பின்னரான இலாபம்* | ரூ.மி. | 181.00 | 282.00 | (35.82) |
| *மொத்த இலாப எல்லை* | % | (0.48) | 13.19 | |
| *தொழிற்பாட்டு இலாப விகிதம்* | % | 10.05 | 24.14 | |
| *தேறிய இலாப விகிதம்* | % | 13.75 | 27.91 | |
| *ஒரு பங்கிக்கான உழைப்பு (ஆரம்ப)* | % | 18.10 | 28.16 | |

### *நிதி நிலைமைப் பொழிப்பு விகிதங்களும்*

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்த சொத்துக்கள் | ரூ.மி. | 17,127.00 | 18,752.00 | (8.67) |
| *மொத்தக் கடன்* | ரூ.மி. | 15,335.00 | 17,116.00 | (10.41) |
| *பங்குதாரர்களுக்கு உரித்து* | ரூ.மி. | 1,792.00 | 1,636.00 | 9.54 |
| *நடைமுறை விகிதம்* | தடவை எண் | 1.62 | 1.18 | |
| *விரைவு விகிதம்* | தடவை எண் | 1.57 | 1.16 | |
| *தொழிற்படு மூலதனத்திற்கான விற்பனை* | தடவை எண் | 0.35 | 1.81 | |

## 4. எதிர்காலத்திற்கான திட்டமிடல்

அரசுக்குச் சொந்தமான நிறுவனம் என்ற வகையில் நிறுவனத்தின் தொழிற்பாடுகள் அரச கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளிலேயே அதிகம் தங்கியுள்ளன. அரச உர மாணிய திட்டத்தின் கீழ் நிறுவனமானது நாடளாவிய ரீதியில் 557 விவசாய சேவை நிலையங்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் மாணிய உரம் விநியோகிக்கும் வியாபாரத்தில் 35 வீதமான பங்கினைக் கொண்டிருந்தது.

எனினும் 2015 ஆம் வருடத்தின் மத்திய வங்கி அறிக்கையின்படி 2005-2014 காலப்பகுதியில் உர மாணியத்திற்கான அரசின் செலவு ரூபா. 238.3 பில்லியனாகவிருந்தது. மொத்த அரச செலவினத்தின் விகிதாசாரமாக உர மாணியத்திற்கான வருடாந்த செலவினம் சுமார் 2 வீதமாகும். இதிலிருந்து மீள்வதற்கும் எதிர்பார்க்கப்பட்ட சமூக மற்றும் பொருளாதார நன்மைகளை அதிகரிப்பதற்காக வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் நிறுவனத்தின் விற்பனை மற்றும் வருமானத்திற்கு பாரிய சவாலாகும் வகையில் 2016 பெப்ரவரி இறுதி முதல் அரசு உர மாணிய திட்டத்தினை மாற்றியமைத்துள்ளது.

நடைமுறையிலிருந்த முறைமையின் கீழ் நிறுவனம் நாட்டின் மொத்த நெல் உரத் தேவையின் 35% இனை விநியோகித்ததுடன் விற்பனைக் கிரயத்தின் 90% அரசினால் மாணியமாக வழங்கப்பட்டது. இதனால் விற்பனைச் சந்தைப் போட்டி பாதிப்புகள் நிறுவனத்திற்கு ஒரு பொருட்டாக இருக்கவில்லை. எனவே திறந்த சந்தைக்கான வெளிப்பாடானது நிறுவனத்திற்கான ஒரு பாரிய சவாலாகும். எனினும் அரசு இறக்குமதி விலைப்பட்டியல்களைச் செலுத்துவதற்காக முன்வந்தமை நிறுவனத்திற்கான ஒரு பாரிய சக்தியாகும்.

நிறுவனமானது தான் முகங்கொடுக்கின்ற அச்சுறுத்தல்களை வாய்ப்புக்களாக மாற்றிக் கொள்வதில் வினைத்திறனாக செயற்படுகின்றது. புதிய உத்திகள் உருவாக்கப்பட்டு வளர்க்கப்படுவதோடு பரிசோதிக்கப்படுகின்றன. நிறுவனம், சந்தையில் உறுதியாக போட்டியிடுவதற்குத் தேவையான வளங்களை, விசேடமாக மனித வளத்தினைக் கொண்டுள்ளது. 5% சிந்தனை 95% செயற்படுத்தல் என்பது பொதுவாகப் பேசப்படும் உத்தியாகும். இது உத்திகளை செயற்படுத்துவதானது 5% தொழிநுட்பவியலானதும் 95% மனிதன் சம்பந்தப்பட்டதானதுமாகும் என விவரிக்கப்படலாம். அத்தோடு மொத்த உணர்வுகளையும் முகாமைத்துவம் செய்தல் என்பது உத்திகள் செயன்முறைப்படுத்துவதில் ஒரு முக்கிய வெற்றிக் காரணியாகும். புணிப்பாளர் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் என்பன புத்தாக்க மனித மூலதனத்துடன் இணைந்து நிறுவனத்தின் வெற்றிக்கான வழியை அமைப்பதில் அயராது உழைக்கின்றன.

***உள்ளக நிலமைகள்***

திறந்த சந்தையில் குறைந்த அனுபவம்

அரச கம்பனியொன்றாக இருப்பதால் அதிகளவில் நிதி மற்றும் பெறுகை சட்ட திட்டங்களுக்கு முகங்கொடுக்க நேர்வதால் செயற்பாடுகளுள் வரையறுக்கப்படல்

செயற்பாட்டு நடைமுறைகளில் குபைாடுகள் காணப்படல் செயற்பாட்டில்செயற்திறனின்மை

மட்டுப்படுத்தப்பட்ட முடிவுப் பொருட்கள் எண்ணிக்கை குறைவு

மானியக் காலப்பகுதியில் கொண்டு வரப்பட்ட குறைந்த கேள்வியுடனான உர இருப்பொன்று கையில் காணப்படல்

***தவிர்ப்பதற்கான தந்திரோபாயங்கள்***

முறையான சாத்திய வளத்துடன்கூடிய சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்காக விற்பனை குழுவொன்றை பயிற்றுவித்தல்

முறையான அங்கீகாரத்துடன்கூடிய கம்பனி களுக்காக விசேட செயற்பாட்டு கால சட்டகமொன்றை தயாரித்தல்

முறையான ஒன்று திரட்டிய தொழிற்பர்டு முறையொன்று அறிமுகப்படுத்தல்

நகர பிரதேசங்களுக்காக தோட்டச் செய்கை மற்றும் பெருந்தோட்ட துறையை இலக்ககாக கொண்டு புதிய உரக் கலவையை அறிமுகப்படுத்தல்

விரிவான விளம்பரம் மற்றும் வியாபார மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இக்குறைவான கேள்வியுடனான உர இருப்பினை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

## 5. தரப்பினர்களுக்காக கம்பனியின் பங்களிப்பு

- கம்பனியின் வழமையான செயற்பாடுகள் ஊடாக நிறுவனத்தின் அனைத்து தரப்பினருக்காக றெுமதியைக் கூட்டும் செயற்பாடு

**உள்ளீடு**

நிதிச் சந்தை
*உரிமை ரூ..1792 மில்*
*கடன் ரூ..4928 மில்*

மூலதனம் ஆதனங்கள்
பொறிகள் மற்றும்
உபகரணங்கள் *ரூ.321 மில்*
மனித மூலதனம்
*136 தொழிலாளர்கள்*

சமூக மற்றும் தொடர்பாடல் மூலதனம்

*- க.சே.நி 557*
*பதிவுசெய்யப்பட்ட பிரதிநிதி -150*
*பதிவுசெய்யப்பட்ட வழங்குனர் -17*

**பெறுமதி கூட்டும் செய்முறை**

வழங்கல் சங்கிலி முகாமை

நிதி முகாமை

வாடிக்கையாளர் தொடர்பு

**இறக்குமதி**

↓

**கலவை மற்றும் களஞ்சியம்**

↓

**விநியோகம்**

நல்லாளுகை

செயற்திறன் செயற்பாடு

நல்ல தொழில் உறவு

**உருவாக்கப்பட்ட பெறுமதி**

பங்குதாரர்களுக்காக
*இலாபம் 181 மில்*
*பங்குலாபம் 25 மில்*

நிதி அளிப்போருக்கு
*ரூ. 4 மில்*

*ஊழியர்களுக்கு*
*ஊழியர் கிரயம் ரூ. 14 மில்.*
*உபகாரம் ஊக்குவிப்பு 2.2 மில்*

நுகர்வோருக்கு
விற்பனை *1840 மில்*

வழங்குனருக்கு
*கொள்வனவு ரூ.962 மில்*

*அரசிற்கு*
*வரி ரூபா 92.*

சமூகத்திற்கு *நன்கொடை ரூ. 0.6மில்*

நிறுத்தி வைத்தல் *ரூ.1401 மில்*

## 6. உர விநியோக செயற்பாடு சுருக்கமாக

### கம்பனியின் சந்தைப் பங்கு

மானியக் காலப்பகுதியில் கம்பனிக்காக 85’ ஆன குறித்துரைக்கப்பட்ட சந்தைப் பங்கு காணப்பட்ட போதிலும் போட்டிச் ந்தைக்கு நுழைவதுடன் இந்நிலைமை குறைவடைந்துள்ளது. மேலும் மானியக் காலப்பகுதியில் கொண்டு வரப்பட்ட கனியுலா உர இருப்பிற்காக போட்டிச் சந்தையில் கேள்வி இல்லாமை காரணமாக 2016 நிதியாண்டின் போது கம்பனியின் சந்தைப்பங்கு விரைவாக வீழ்ச்சிடைந்து உள்ளது.













அட்டவணை 07 2015 மற்றும் 2016 இல் கம்பனியின் சந்தைப் பங்கு

**ஆண்டின் போதான வயல் மற்றும் ஏனைய உர விநியோகம்**




*அட்டவணை 08 ஆண்டின் போதான வயல் மற்றும் ஏனைய உர விநியோகம்*

**மாவட்டங்களுக்கு இடையே உர வியோகம்**




அட்டவணை 09 மாவட்டங்களுக்கு இடையே உர வியோகம் (மெ.தொ)

**பிராந்தியக் களஞ்சியங்களின் விநியோக வலையமைப்பு**



## 7. கம்பனியின் ஊழியர்கள் தொடர்பான மீளாய்வு

கம்பனியின மிகவும் முக்கியமான முன்னுரிமையாளர் அதன் ஊழியர்களாகும். இதுவரை எமது கம்பனியில் ஊழியர்கள் எண்ணிக்கை 136 ஆகும். கம்பனியின் பலம் அதன் ஊழியர்களின் அர்ப்பணிப்பிலேயே தங்கியிருக்கின்றது. அதனுடன் இணைந்ததாக கம்பனியும் தனது ஊழியர்களின் நிலைத் திருதன்மை தொடர்பாக எப்போதும் கவனத்தை செலுத்தி வருகின்றது. அவ்வாறே அவ்வப்போது ஊழியர் மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதுடன் சகல தொழிலாளர் சட்டங்களையும் எமது கம்பனி பின்பற்றி வருகின்றது.

- **ஆண்டின் போதான மனித வளங்கள் மதிப்பீடு**



- **நிறுவனத்தின் பதவியணியினர் வலிமை**




*அட்டவணை ஐந்தாண்டுகளில் பதவியணிக்கான இழப்பீடுகள்*

- **மனித மூலதனத்தின் மீதான நிதி மீளாய்வு**

| ஆண்டு | 2015/16 | 2014/15 |
|---|---|---|
| ஒரு ஊழியர் வருமானம் (000') | 13,527 | 11,547 |
| ஒரு ஊழியருக்கான இலாபம் (000') | 1,331 | 2,056 |
| ஒரு ஊழியர் கிரயம் (000') | 606 | 501 |
| ஒழு ஊழியருக்கான உழைப்பு | 2.1 | 4.1 |
| | | |
| தொழிலாளர் எண்ணிக்கை | 136 | 137 |

# 8. நிதி அறிக்கையிடல்

## 8.1 பணிப்பாளர்களின் பொறுப்புக் கூற்று

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) மற்றும் 151 ஆம் பிரிவுகளின் கீழான தேவைப்பாட்டிற்கு அமைவாக நிதியாண்டிற்கான கம்பனியின் விரிவான வருமானக் கூற்றையும் நிதியாண்டின் இறுதியில் உல்ளவாறான கம்பனியின் உண்மையானதும் நியாயமானதுமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் ஒவ்வொரு நிதியாண்டிற்குமான நிதிக்கூற்றுக்களையும் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்களாவர்.

148 ஆம் பிரிவின் கீழ், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளமையை நியாயமான துல்லியத்தன்மையுடனும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு அந் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு உடனுக்குடனும் முறையாகவும் மேற்கொள்ளப்படுவதையும் உறுதிப்படுத்துவது பணிப்பாளர்களது பொறுப்பாகும்.

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒருமைப்பாட்டிற்கும் குறிக்கோளுக்குமான பொறுப்பை சபை ஏற்றுக்கொள்கின்றது. நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டு நியாயமானதும் வெளிப்படையுமான தீர்ப்புகள் எடுக்கப்பட்டு கொடுக்கல் வாங்கல்களின் வடிவமும் கருப்பொருளும் முறையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தும் பொறுப்பை பணிப்பாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டம் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLFRS) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் அவர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

மேலும் கன்பனி அதிகாரச்சட்டத்தால் தேவையான தகவல்களை நிதிக்கூற்றுக்கள் வழங்குகின்றன. பணிப்பாளர்கள், கம்பனி பற்றிய தமது அறிவு, முக்கிய செயற்பாடுகள் மற்றும் குறித்த விசாரணைகளின் மூலம் அடுத்துவரும் ஆண்டில் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய மூலவளங்கள் உள்ளன என்பது குறித்த அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர். இந் நிதிக்கூற்றுக்கள் அவ் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள், கன்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான நியாயமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் அது தொடர்பாக மோசடிகள் மற்றும் ஏனைய முறைகேடுகளைக் கண்டறிந்து தடுக்கும் நோக்குடன் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை முறைப்படி செயற்படுத்தியுள்ளனர். கன்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 56(2) ஆம் பிரிவின் தேவைப்பாட்டின் படி தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள பங்கிலாபத்தைப் பகிர்வதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அப் பகிர்வை அடுத்து கடன் தீர்வுத்திறன் ஆய்வில் திருப்திநிலையில் கம்பனி நிலவும் என்பது குறித்து கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 57 ஆம் பிரிவின் படி, கிடைக்கப்பெற்ற தகவலை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வாளர்களிடமிருந்து தற்போது பரிந்துரைக்கப்பட்ட பங்கிலாபம் தொடர்பான கடன் தீர்வுத்திறன் சான்றிதழ் கோரப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பொறுப்புகள் குறித்து கணக்காய்வாளர்களின் அறிக்கை 31 ஆம் பக்கத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.

**இணக்கப்பாட்டு அறிக்கை**

நிதி நிலைமை திகதியில் உள்ளவாறு கம்பனி தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய அரசாங்க மற்றும் ஊழியர்களுக்கான சகல நியதிச்சட்டக் கொடுப்பனவுகளும் தமது சிறந்த அறிவிற்கமைய செலுத்தப்பட்டும் தேவையான சந்த்ர்ப்பத்தில் ஏற்பாடு செய்யப்பட்டும் உள்ளவதாக் பணிப்பாளர்கள் உறுதியளித்துள்ளனர்,

எஸ். பீ. மொறவக்க
சபையின் கட்டளைக்கமைய
வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள்
செயலாளர்கள்

## 8.2 தலைவரினதும் நிதி முகாமையாளரினதும் பொறுப்புக் கூற்று

2016 மார்ச் 31 இல் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்களின் நிதிக்கூற்றுக்கள் பின்வரும் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்.
- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டம்.
- பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட நல்லாளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவை.

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பில் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் உரிய முறையிலும் தொடர்ச்சியாகவும் நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளில் விளக்கப்பட்டவாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனை நாம் உறிதிப்படுத்துகின்றோம். குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு நியமங்கள எதுவித மாற்றங்களும் இன்றி பிரயோகிக்கப்பட்டுள்ளன. உயர் தீர்ப்பிலும் சிக்கல்வாய்ந்த விடயங்களுடன் தொடர்புபட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் மதிப்பீடுகளும் கணக்காய்வுக் குழுவுடன் வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளன.

சொத்துக்கள் பாதுகாப்பதற்கும், மோசடிகள் மற்றும் ஏனைய முறைகேடுகளைக் கண்டுபிடித்துத் தடுப்பதற்கும், கணக்கீட்டுப் பதிவேடுகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை உருவாக்கும் போது போதியளவு முறையான கவனத்தை எடுத்துள்ளோம். இவை தொடர்ந்து செல்லும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பிடப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டுள்ளன. கம்பனி உள்ளகக் கணக்காய்வாளர்களால் காலத்திற்குக் காலம் நடாத்தப்படும் கணக்காய்வுகளின் மூலம் கம்பனியால் உருவாக்கப்பட்ட கொள்கைகளும் கோட்பாடுகளும் தொடர்ந்து பின்பற்றப்பட்டுள்ளமைக்காக நியாயமான உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், உள்ளகக் கட்டுப்பாடுகளிலும் கணக்கீட்டிலும் ஏதேனும் முறைமையால் வழங்கப்படும் உறுதிப்பாட்டை அளவிடுகையில் உள்ளார்ந்த வரையறைகள் காணப்படுகின்றன.

கம்பனியின் கணக்காய்வுக் குழுவானது, கணக்காய்வுகளின் ஆக்கத்திறனை மீளாய்வு செய்து, கணக்காய்வு, உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நிதி அறிக்கையிடல் பற்றிய பிரச்சினைகள் உள்ளகக் கணக்காய்வாளர்களுடனும் சுதந்திரமான கணக்காய்வாளர்களுடனும் காலத்திற்குக் காலம் சந்திப்பை நடாத்தி கலந்தாலோசித்து வருகின்றது. சுதந்திரமான கணக்காய்வாளர்களும் உள்ளகக் கணக்காய்வாளர்களும் கணக்காய்வுக் குழுவினருடன் ஏதேனும் விடயம் குறித்து கலந்தாலோசனைகளை நடாத்துவதற்கு முழுமையான விருப்பிற்குரிய வகையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்பட்டன.

…………………..
சமிந்த குமார லியனகே
தலைவர்

…………………………………….
எஸ். என். ஜே. விக்ரமசிங்ஹ
நிதி மற்றும் நிர்வாக முகாமையாளர்.

## 8.3 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தலைவர்,
வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷியல் உரக் கம்பனி

**வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷியல் உரக் கம்பனியின் 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷியல் உரக் கம்பனியின் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினையும் உள்ளடக்கிய 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கம்பனியின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. கம்பனியின் தலைவருக்கு 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதியன்று விரிவான அறிக்கையொன்று வழங்கப்பட்டது.

### 1.2 கம்பனியின் உருவாக்கம்

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷியல் உரக் கம்பனி 1872 கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்டு 1872 முதல் 1976 வரை ஒரு நூற்றாண்டு மேற்பட்ட காலமாக பெரிய பிரித்தானியாவின் நிர்வாகத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. 1971 இன் 35 ஆம் இலக்க வியாபாரங்களை கையேற்றல் அதிகாரச்சட்டத்தின் கீழ் 1976 ஆம் ஆண்டு அரசிற்கு கையேற்கப்பட்டிருந்ததுடன் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷியல் உரக் கம்பனி எனும் பெயரில் தகுதி வாய்ந்த அதிகாரியொருவரின் கீழ் வியாபார நடவடிக்கைகள் நடாத்திச் செல்லப்பட்டிருந்தன.

1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்கப்பட்ட நிறுவனங்களை பொதுக் கம்பனியொன்றாக மாற்றும் அதிகாரச்சட்டத்தின் கீழ் அரச கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்டது. 1994 ஆம் ஆண்டு அரசின் கொள்கையின் பிரகாரம் தனியார் மயப்படுத்தப்பட்டதுடன் 1996 இன் 29 ஆம் இலக்க அரச வியாபாரங்களை புனரமைப்புச் செய்யும் அதிகாரச்சட்டத்தின் கீழ் 1997 ஆம் ஆண்டின் போது மீண்டும் கையேற்கப்பட்டு வரிசை அமைச்சின் கீழ்

நிர்வகிக்கப்பட்டு வந்தது. தற்போது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் கம்பனியொன்றாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

## 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷியல் உரக் கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் ஆயுட் கணிப்பீடு இலாபம் ஏனைய விரிவான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் ரூபா 108,697,211 தொகையான ஆயுட் கணிப்பீட்டு இலாபம் மீளாய்வாண்டின் விரிவான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் நடைமுயல்லாத சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 38,318,368 கிரயமான சொத்துக்கள், முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இற்கமைய திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

உரப் போக்குவரத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 200,000 தொகையான முற்பணம் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததன் பின்னரும் தொடர்ந்தும் முற்பணமாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய அட்டுறு போக்குவரத்துச் செலவினமான ரூபா 273,473 கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக போக்குவரத்துச் செலவினம் ரூபா 473,473 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கடன்பட்டோர் மீதியை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையுடன் ஒப்பிடும் போது ரூபா 1,478,241 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டின் போது இடம்பெற்ற இருப்புச் சேதங்கள் மற்றும் காணாமல் போனமை தொடர்பில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமை மற்றும் மீளாய்வாண்டிற்காக பிரதான உர களஞ்சியம் பௌதீக மெய்மையாய்விற்கு உட்படுத்தப்படாமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 557,757,172 புத்தக மீதியான இருப்புக்களின் சரியானதன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 2.2.4 பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட ரூபா 47,254,730 ஆன வியாபாரக் கடன்பட்டோர் மீதியிலிருந்து மீளாய்வாண்டினுள் ரூபா 286,620 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு மேல் பழமையான கடன் மீதிகளை அறவிடல் மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) 46 கமநல சேவை நிலையங்களுடன் மீளாய்வாண்டில் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கையில் 2015 மார்ச் 31 இல் உள்ளவாறு பசளை கொள்வனவுகளுக்குரிய வாடிக்கையாளர்களின் வைப்புக்கள் மற்றும்

கூடுதலாகச் செலுத்தியிருந்த ரூபா 13,360,483 ஆன தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 மார்ச் 31 இல் உள்ளவாறு 06 கமநல சேவை நிலையங்களில் காணப்பட்ட ரூபா 1,738,244 ஆன கடன் மீதிகளை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. நிதி மீளாய்வு

------------------------

### 3.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 180,971,671 மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 281,645,038 மிகையாக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 100,673,367 ஆன வீழ்சியொன்று அவதானிக்கப்பட்டது. உர மானியத்திற்கான பொது மேந்தலைக் கிரயம் ரூபா 71,168,475 ஆல் அதிகரித்தமை மற்றும் ஏனைய வருமனம் ரூபா 21,723,061 ஆல் குறைவடைந்தமை போன்றன மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக அமைந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2011/2012 ஆம் ஆண்டின் போது ரூபா 167,128,785 ஆன நிதி மிகையில் 2012/2013 மற்றும் 2013/2014 ஆம் ஆண்டுகளின் போது குறைவொன்று தென்பட்டதுடன், 2014/2015 ஆம் ஆண்டின் போது அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. மீண்டும் 2015/2016 ஆம் ஆண்டின் போது ரூபா 180,971,671 வரை குறைவடைந்திருந்தது. ஊழியர் ஊதியம், அரச வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பன சீராக்கப்பட்டதன் பின்னர் 2011/2012 ஆம் ஆண்டின் போது ரூபா 322,750,857 ஆன சேர்க்கப்பட்ட பெறுமதி 2012/2013 மற்றும் 2013/2014 ஆம் ஆண்டுகளின் போது குறைவொன்றைக் காண்பித்ததுடன் 2014/2015 ஆம் ஆண்டின் போது அதிகரித்து மீண்டும் 2015/2016 ஆம் ஆண்டின் போது ரூபா 350,816,416 வரை குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பசளை, இரசாயன திரவியங்கள், கனியவளப் பொருட்கள் திரவியங்கள மற்றும் ஏனைய இயற்கை மற்றும் செயற்கையான திரவியங்கள் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் பூர்த்தி செய்யப்படாத வடிவிலான அப்பொருள் உற்பத்திக்காக ஏனைய மூலப்பொருட்கள், முகவர்கள், இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், விநியோகிப்போர் மற்றும் வியாபாரிகளாக வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளலும், அவற்றை மீள் ஏற்றுமதி செய்தல் பசளை உற்பத்திக்கு தேவையான இரசாயனப் பொருட்கள் மற்றும் எனைய மூலப்பொருட்கள் எந்தவொரு வடிவத்திலான பசளை ஏற்றுமதி செய்வதற்கும் முகவர்களாக செயற்படுதல் மற்றும் இறக்குமதி ஏற்றுமதி பொதியிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன கம்பனியின் அகவிதியின் பிரகாரம் கம்பனியின் நோக்கங்களாகும்.

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மானியங்கள் அடிப்படையில் கம்பனிக்கு கிடைத்த திறைசேரி மானியங்கள் 2016 பெப்ரவரி 29 ஆந் திகதி முதல் அகற்றப்பட்டுள்ளதால் எதிர்கால வியாபார ஆபத்தொன்றை எதிர்கொள்வதற்கு கம்பனியால் முன் திட்டமிடல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. SWOT பகுப்பாய்வு (Strengths and weaknesses in the organization and the external tiers and opportunities) மற்றும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய பசளை வகைகள் மூலம் விற்பனை அதிகரிப்பினை மேற்கொள்வதற்காக திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் இரசாயன பசளைப் பயன்பாட்டிற்குப் பதிலாக சேதனப் பசளைகளை இடுவதற்கு முயற்சித்தல் ஊடாக விற்பனை மேம்பாட்டிற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் விற்பனையை அதிகரிப்பதற்காக இறக்குமதி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

இறக்குமதி செய்யப்பட்ட பசளை இருப்பு இந்நாட்டினை அடைந்ததன் பின்னர் குறித்த போக்குவரத்து கம்பனி / முகவர்களால் அந்த இருப்பு ஹுனுப்பிட்டிய மற்றும் ஏனைய களஞ்சியங்களுக்கு போக்குவரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் கம்பனியால் தேசிய பசளை செயலகத்திற்கு பசளை மாதிரி வழங்கப்பட்ட

போதிலும், அதற்காக விநியோகிக்கப்படுகின்ற வியாபாரக் கடிதம் (Marketing Letter) கிடைக்கப்பெறும் வரை பசளை விற்பனை செய்ய முடியாது. பரீட்சிக்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் UREA, MOP, TSP பசளை வகைகள் 27 சந்தர்ப்பங்களில் வியாபாரக் கடிதம் கிடைப்பதற்கு 01 மாதம் முதல் 07 மாத காலம் அளவில் எடுப்பதால் இருப்பு பராமரிப்பிற்காக மேலதிக கிரயமொன்று செலவிட நேர்கின்றது.

4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மிட்சுபிஷி பஜிரோ வண்டியொன்றை கை தவிர்ப்புச் செய்யும் போது 04 கூறுவிலைகள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அதன் கூடிய விலை ரூபா 1,635,950 மற்றும் இரண்டவாது விலை ரூபா 1,430,000 ஆக இருந்தன. எனினும் கூடிய விலை விபரங்களை முன்வைத்த நபரினால் வாகனத்தின் மூல பதிவுச் சான்றிதழ் (Original) தரப்பட்டால் மாத்திரம் அவ்விலைக்கு கொள்வனவு செய்வதாகவும் பிரதியொன்று (Duplicate) கிடைத்தால் கொள்வனவு செய்ய முடியாதெனவும் 2015 மே 07 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கம்பனியால் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை (Original) மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளாப்படாமையால் அடுத்த விலையான ரூபா 1,430,000 இற்கு விற்பனை செய்ய நேர்ந்தது. இதன் காரணமாக வாகன விற்பனையால் கிடைக்க கூடியதாக இருந்த ரூபா 205,950 தொகை கம்பனிக்கு இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 யூன் 19 ஆந் திகதிய 49 ஆம் இலக்க பணிப்பாளர் சபை கூட்டத்தின் 421 கூட்ட அறிக்கையின் பிரகாரம் 1994 ஆம் ஆண்டில் காணப்பட்ட கடன் மீதிகளில் அறவிட முடியாதிருந்த ரூபா 16,177,108 ஆன கடனை அறவிடுவதற்காக நிதி கம்பனியொன்றுக்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை அதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனியின் தலைமை அலுவலகம் மற்றும் தலைமை களஞ்சியத் தொகுதி என்பன ஹுனுபிட்டிய காணி 4.832 மற்றும் 1.176 ஹெக்டேயார் என் இரண்டு பகுதிகளுடன் கூடிய அரச காணி ஒன்றாக இருந்ததுடன் இதுவரை அதன் உரித்தை அமைச்சிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நேகம பசளை களஞ்சியத்தின் திருத்த வேலைகளுக்காக ரூபா 3,704,000 மதிப்பிடப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 3,551,207 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெறுகை நடைமுறையிலிருந்து விலகி திருத்த நடவடிக்கைகள் கட்டிட திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உப ஒப்பந்தத்திற்காக நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாதிருக்கையில் கட்டிடத் திணைக்களத்தினால் சேவைநாடுனர்களுக்கு அங்கீகாரமின்றி திருத்தவேலைகள் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) மதிப்பீட்டு அளவீட்டுப்பத்திரத்தின் பிரகாரம் 09 விடயங்கள் மதிப்பிடப்பட்ட அளவினை விஞ்சி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 10 விடயங்களின் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது சரியான தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் பாதுகாப்பு சேவைகளுக்காக தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 10,384,040 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அப்பாதுகாப்பு சேவைகளை வழங்கும் நிறுவனத்திற்கு 2015 ஆகஸ்ட் 15 ஆந் திகதி முதல் மீண்டும் ஒருமுறை பெறுகை நீடிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உதவி நிர்வாக முகாமையாளரினால் பல சந்தர்ப்பங்களில் அப்பாதுகாப்பு சேவைகள் நிறுவனத்தின் சேவை திருப்தியற்றதென எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 2015 நவம்பர் 10 ஆந் திகதிய பணிப்பாளர் கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் 2015 திசெம்பர் 01 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அவர்களின் சேவையை இடைநிறுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 04

சந்தர்ப்பங்களில் பெறுகை செயற்பாட்டிலிருந்து விலகி காலம் நீடிக்கப்பட்டு அந்நிறுவனத்தின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 2015 யூலை 18 ஆந் திகதிய சீஎஸ்டீ/1/12/6(298) ஆம் இலக்க சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களை அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் பாதுகாப்பு மற்றும் செயற்திட்ட கடமைகளில் ஈடுபடுத்துதல்" எனும் தலைப்பில் விநியோகிக்கப்பட்டிருந்த கடிதத்தின் பிரகாரம் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களைப் பெற்றுக்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்நிறுவனத்தினால் ஒப்பந்தப் பெறுமதியில் 10 சதவீத செயலாற்றல் பிணைப்பொறுப்பினை வைக்க தவறியதன் அடிப்படையில் இந்நிறுவனத்திடமிருந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்வது இடைநிறுத்தப்பட்டு தொடர்ந்தும் மேற்படி நிறுவனத்திடமிருந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நேகம உரக் களஞ்சியத்தில் 2008 பெப்ரவரி மாதத்தின் போது இடம்பெற்றிருந்த ரூபா 105,000 ஆன நிதி முறைகேடுகள் தொடர்பாக ஆரம்ப பரிசோதனையொன்று நடாத்தப்படாமல் இருந்ததுடன், பதுளை பிரதேச களஞ்சியத்தில் 2006 பெப்ரவரி மாதத்தின் போது இடம்பெற்றிருந்த ரூபா 1,688,000 ஆன இருப்பு பற்றாக்குறையொன்றுக்குரிய ஆரம்ப விசாரணை நடாத்தப்படாமல் இருந்த காரணத்தினால் பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டு அந்நட்டத்தை அறவிடுவதற்கு 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெஹிஅத்தகண்டிய உரக் களஞ்சியத்தின் களஞ்சிய பொறுப்பாளர் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 1,903,555 பணத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியதால் கம்பனிக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்ததுடன் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமையால் காலம் தாழ்த்தப்பட்டதால் அறவிடக்கூடிய சந்தர்ப்பங்கள் இழக்கப்படுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

---

ஆட்சேர்ப்பு செயல்வழிக் கோவையின் பிரகாரம் பதவிநிலைத்தர உத்தியோகத்தர்களின் பதவி உயர்வு நியமன அதிகாரியான பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் இடம்பெற வேண்டிய போதிலும், அதற்கு முரணாக முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் ஒருவர் தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படை பதவியுயர்த்தப்பட்டிருந்தார்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

---

2002 மே 24 ஆம் திகதிய பீஎவ்/பீஈ/21 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 58 நாட்கள் தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், வரைவு கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் திருத்திய நிதிக்கூற்றுக்கள் 36 நாட்கள் தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 கூட்டிணைந்த திட்டம்**

---

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் தமது வியாபார நடவடிக்கைகளை குறுங்கால நீண்டகால நோக்குடன் முகாமை செய்யப்பட வேண்டியிருப்பதால் ஆகக்குறைந்தது 03 ஆண்டு காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் குறித்த செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் அதன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) நிதிக் கட்டுப்பாடு | - அனைத்துப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுக்காக காசேடொன்று முறையாக பராமரிக்கப்படாமை.<br>- பிராந்திய களஞ்சியங்களில் பசளைகளை களஞ்சியப்படுத்தல் மற்றும் பசளை விற்பனை நடவடிக்கைகளின் போது முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்படாமை மற்றும் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவிடுவதற்காக நடைமுறையொன்றும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு | பொருள் பெறுவனவு மற்றும் விநியோகம் என்பவற்றை நாளதுவரையாக்கல் மற்றும் முறையாக மேற்கொள்ளாமை. |
| (இ) வாகனக் கட்டுப்பாடு | ஒவ்வொரு வாகனத்திற்குமுரிய அடிப்படை தகவல்கள் உள்ளடக்கப்பட்ட சம்பவப் பதிவேட்டுப் புத்தகங்கள் பேணப்படாமை |
| (ஈ) ஒப்பந்தக் கட்டுப்பாடு | பெறுகைகள் வழிகாட்டல்கள் கோவை மற்றும் உரிய சுற்றறிக்கைகளுடன் இணங்கியிராமை |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*(இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது)*

**8.4 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று**

| | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| வருமானம் | 10 | 1,839,656,674 | 1,581,875,275 |
| விற்பனை கிரயத்திற்கான மானியம் | 10 அ | 8,286,176,401 | 6,072,507,580 |
| விற்பனைக் கிரயம் | 10 ஆ | (10,134,587,135) | (7,432,268,472) |
| மொத்த இலாபம் | | (8,754,060) | 222,114,384 |
| நிறவக மேந்தலைகள் மீதான மானியம் | 10இ | 298,841,310 | 227,672,835 |
| ஏனைய வருமானம் | 11 | 52,649,633 | 74,372,694 |
| | | 342,736,883 | 524,159,913 |
| நிர்வாகச் செலவினங்கள் | 12 | (115,929,498) | (97,718,759) |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவினம் | 13 | (41,347,065) | (48,113,353) |
| ஏனைய செலவினம் | 14 | (111,974) | (607,163) |
| செயற்பாட்டிலான இலாபம் | | 185,348,347 | 377,720,637 |
| தேறிய நிதிக் கிரயம் | 15 | 67,177,832 | 58,808,532 |
| நிதி வருமானம் | 15.அ | (71,027,841) | (66,803,684) |
| நிதி செலவினம் | 15.ஆ | 3,850,008 | 7,995,152 |
| **வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்)** | | **252,526,179** | **436,529,170** |
| வருமான வரிச் செலவினம் | 16 | (71,554,508) | (154,884,132) |
| **வருடத்திற்கான தேறிய இலாபம்** | | **180,971,671** | **281,645,038** |
| **தலா ஒரு பங்கிற்கான உழைப்பு** | 17 | 18.10 | 28.16 |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| **ஆண்டிற்கான முழு மொத்த வருமானம்** | | **180,971,671** | **281,645,038** |

**(அடைப்புக் குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழிப்பனவுகளை குறிக்கின்றன)**

**8.5** *(இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது)*

**2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2015/2016 | 2014/2015 |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் | 18 | 321,149,853 | 338,728,081 |
| மூலதன நடைபெறும் வேலை | 19 | - | 1,078,857 |
| | | **321,149,853** | **339,806,938** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்களும் ஏனைய நுகர்வுப் பொருட்களும் | 21 | 566,883,075 | 356,056,506 |
| வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் | 22 | 14,778,545,989 | 17,001,876,435 |
| ஊழியர் கடன்களும் முற்பணமும் | 23 | 13,660,907 | 11,872,818 |
| வைப்புக்களும் முற்பணமும் | 24 | 21,172,542 | 14,898,179 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 25 | 383,613,301 | 364,874,542 |
| வங்கியில் காசு | 26 | 1,042,196,834 | 662,782,813 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **16,806,072,649** | **18,412,361,292** |
| **மொத்த சொத்துக்கள்** | | **17,127,222,502** | **18,752,168,230** |
| | | | |
| **உரிமையும் பொறுப்புக்களும்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கங்களும்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 27 | 100,000,000 | 100,000,000 |
| மூலதன ஒதுக்கம் | 28 | 1,683,685 | 1,683,685 |
| மீள்நிர்மாணம் மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 29 | 288,947,576 | 288,947,576 |
| நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | | 1,401,568,614 | 1,245,596,942 |
| | | **1,792,199,875** | **1,636,228,203** |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | 30 | 12,648,791 | 11,912,670 |
| பிற்போடப்பட்ட வரி | 31 | 50,071,259 | 52,701,495 |
| கடன்களுக்கான வட்டி | 32 | 4,927,955,849 | 1,472,280,899 |
| | | **4,990,675,899** | **1,536,895,064** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கடன்களுக்கான வட்டி | 32 | 7,746,930,785 | 11,010,460,928 |
| வியாபார மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் | 33 | 2,486,298,697 | 4,420,610,316 |
| செலுத்த வேண்டிய பங்கிலாபம் | 34 | 27,000,000 | 12,000,000 |
| வைப்புக்களும் கிடைக்கப்பெற்ற முற்பணமும் | 35 | 17,387,986 | 18,983,437 |
| சட்டரீதியான கொடுப்பனவு | 36 | 31,005,620 | 95,107,433 |
| அட்டுறு செலவினம் | 37 | 35,723,640 | 21,882,848 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **10,344,346,728** | **15,579,044,963** |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | **17,127,222,502** | **18,752,168,230** |

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தாரிக்கப்பட்டுள்ளதாகஉறுதிப்படுத்துகின்றேன். 7 ஆம் பக்கத்திலிருந்து 35 ஆம் பக்கம் வரையான பக்கங்களிலான நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் நிதிக்கூற்றுக்களின் ஒன்றிணைந்த பகுதியாக உள்ளன.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தாரிக்கப்பட்டுள்ளதாக நான் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………

நிதி மற்றும் நிர்வாக முகாமையாளர்
எஸ்என்.ஜே.விக்ரமசிங்ஹ

இந்நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிபதற்கான பொறுப்பு பணிப்பாளர் சபையின் உடையதாகும். பணிப்பாளர் சபை சர்பாக கையொப்பமிட்டவர்கள்.

……………………………… ………………………………

**தலைவர்**
சமிந்த குமார லியனகே

**பணிப்பாளர்**
பீ.ஏ.எஸ்.ஏ. குமார

**(அடைப்புக் குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழிப்பனவுகளை குறிக்கின்றன)**

*(இலங்கை ரூபாவில்
வெளிப்படுத்தப்பட்டுள்ளன.)*

**2016 மார்ச் இல் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்**

**8.6 உரிமை மாற்றல் கூற்று**

| | பங்கு மூலதனம் | மூலதன ஒதுக்கீடு | வருமானன ஒதுக்கீடு | மீள்மதிப்பீட்டு ஒதுக்கீடு | நிறுத்திவைக்கப்பட்ட உழைப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **31-03-2014** நிறுத்தி வைக்கப்பட்ட மீதி | **100,000,000** | **1,683,685** | **-** | **288,947,577** | **977,951,904** | **1,368,583,163** |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம்/நட்டம் | - | - | - | - | 281,645,038 | 281,645,038 |
| பங்கிலாபம் | - | - | - | - | (14,000,000) | (14,000,000) |
| **31-03-2015** நிறுத்தி வைக்கப்பட்ட மீதி | **100,000,000** | **1,683,685** | **-** | **288,947,577** | **1,245,596,943** | **1,636,228,202** |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம்/நட்டம் | - | - | - | - | 180,971,671 | 180,971,671 |
| பங்கிலாபம் | - | - | - | - | (25,000,000) | (25,000,000) |
| **31-03-2016** நிறுத்தி வைக்கப்பட்ட மீதி | **100,000,000** | **1,683,685** | **-** | **288,947,577** | **1,401,568,614** | **1,792,199,873** |

**(அடைப்புக் குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழித்தலை குறிக்கின்றன)**

**2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்**

**8.7 காசுப் பாய்ச்சல் கூற்று**

| | 2016 | 2015 |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல் | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | 252,526,179 | 436,529,169 |
| ***சீராக்கங்கள்*** | | |
| பெறுமானத்தேய்வு | 24,623,279 | 23,520,969 |
| ஆதனங்கள், பொறிகள் உபகரண சேத இழப்பு | - | 182,228 |
| ஆதனங்கள், பொறிகள் உபகரணங்களின் விற்பனை | (2,224,305) | (1,736,230) |
| ஆண்டிற்கான பணிக்கொடைக்கான ஏற்பாடு | 2,882,050 | 2,882,050 |
| வட்டி வருமானம் | (71,027,841) | (66,803,684) |
| வட்டிச் செலவினம் | 3,850,008 | 7,995,152 |
| **தொழிற்படு மூலதன அசைவுகளுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | **210,629,371** | **402,569,654** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | |
| இருப்புக்கள் | (210,826,570) | (217,712,817) |
| வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் | 2,223,330,445 | (2,586,574,277) |
| வைப்புக்களும் முற்பணமும் | (6,274,363) | (10,632,147) |
| ஊழியர் கடன்களும் முற்பணமும் | (1,788,089) | (2,330,571) |
| வியாபார மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் | (1,934,311,619) | (338,069,305) |
| சட்டரீதியான பெறுவனவு | (2,189,871) | (3,200,285) |
| சட்டரீதியான கொடுப்பனவு | (2,059,693) | (29,534,085) |
| வைப்புக்களும் கிடைக்கப்பெற்ற முற்பணமும் | (1,595,452) | (1,498,887) |
| அட்டுறு செலவினங்களுளும் ஏற்பாடுகளும் | 13,840,792 | (15,410,941) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசு** | **288,754,952** | **(2,802,393,660)** |
| பணிக்கொடை கொடுப்னவு | (2,145,929) | (148,983) |
| வட்டிக் கொடுப்பனவு | (3,850,008) | (7,995,152) |
| வரிக் கொடுப்பனவு | (134,036,994) | (289,766,710) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசு** | **148,722,021** | **(3,100,304,504)** |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் கையேற்பு | (7,045,051) | (34,485,975) |
| ஆதனங்கள், பொறிகள் உபகரணங்களின் விற்பனையால் கிடைடத்த காசு | 2,224,305 | 1,736,230 |
| ஏனைய நிதிச்சொத்துகளில் தேறிய முதலீடு | (18,738,760) | (31,858,426) |
| வட்டிப் பெறுவனவு | 71,027,841 | 66,803,684 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட தேறிய காசு** | **48,547,192** | **2,195,513** |
| **நிதியீட்ட நடவடிக்கைளினால் உருவான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆண்டின் போதான பங்கிலாப கொடுப்பனவு | (10,000,000) | (12,000,000) |
| ஆண்டின் போதான கடன் எடுப்பனகள் | 21,790,570,454 | 6,771,039,645 |
| ஆண்டின் போதான கடன் தீர்ப்பனவுகள் | (21,595,653,252) | (3,588,197,559) |
| **நிதியீட்ட நடவடிக்கைளினால் உருவான தேறிய காசுப்பாய்ச்சல்** | **184,917,202** | **3,170,842,085** |
| ஆண்டின் போதான காசு மற்றும் அதற்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு | 382,186,415 | 72,733,095 |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் அதற்குச் சமமானவைகள் | 662,782,813 | 590,049,717 |
| வருட இறுதியில் காசு மற்றும் அதற்குச் சமமானவைகள் (குறிப்பு) **26** | **1,044,969,229** | **662,782,813** |

**(அடைப்புக் குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழிப்பனவுகளை குறிக்கின்றன)**

**1. கூட்டமைப்புத் தகவல்**

**1.1 அறிக்கையிடல் நிறுவனம்**

கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி, ("கம்பனி" யானது) 1989 ஒட்டோபர் 04 ஆம் திகதி 1982 இன் 17 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டமைக்கப்பட்டு 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் 2011 யூலை 15 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டு இலங்கையில் நிலையகமுற்று இலங்கை அரசாங்கத்தால் உரித்தாக்கப்பட்டிருந்தது.

பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் கம்பனியின் வணிக இடமும் "ஹுணுப்பிட்டிய, வத்தளையில் அமைந்துள்ளது.

**1.2 கம்பனி**

கம்பனி ஆரம்பத்தில் நெல், தேயிலை, தென்னை, இறப்பர் மற்றும் பிற பயிர்களுக்குத் தேவையான உரங்களை இறக்குமதி செய்தல், கலத்தல் மற்றும் சந்தைப்படுத்தலில் ஈடுபட்டிருந்தது.

**1.3 நிதியாண்டு**

கம்பனியின் நிதி அறிக்கைக் காலப்பகுதி மார்ச் 31 அன்று முடிவடைகின்றது.

**1.4. வழங்கலுக்கு அங்கீகரிக்கப்பட்ட திகதி**

கம்பனிப் பணிப்பாளர்கள் சபை நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பணத்திற்கும் பொறுப்பானவர்கள். கம்பனியின் 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூலை 20 ஆம் திகதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி வழங்கப்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்டது.

**1.5 ஊழியர்களின் எண்ணிக்கை**

கம்பனி ஊழியர்களின் எண்ணிக்கை

| | 31 மார்ச் 2016 | | 31 மார்ச் 2015 |
|---|---|---|---|
| • நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | 22 | • நிறைவேற்று உத்தியோகத்தர்கள் | 19 |
| • எழுதுவினைஞர்கள் மற்றும் அதனுடன் இணைந்த | 102 | • எழுதுவினைஞர்கள் மற்றும் அதனுடன் இணைந்த | 106 |
| • தொழிலாளர் | 12 | • தொழிலாளர் | 12 |
| | 134 | | 137 |

**2. தயாரிக்கும் அடிப்படை**

**2.1 இணக்கக் கூற்று**

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் (CASL) விநியோகிக்கப்பட்ட (SLFRS எனக் குறிப்பிடப்படும்) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படியும் 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகளின் படியும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.2 அளவீட்டு அடிப்படை**

நிதி நிலைமைக் கூற்றின் பின்வரும் முக்கிய விடயங்கள் தவிர நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- காணி கட்டிடங்கள் 2007.03.12 இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இலாப நட்டங்களின் ஊடாக நியாயப் பெறுமதியிலான நிதிக் கருவிகள் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளன.
- வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு உள்ளபடி பெறுமதியிடப்பட்டு வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடுகள் அளவிடப்படுகின்றன.

**2.3 செயற்பாட்டு மற்றும் வெளிப்படுத்தல் நாணயம்**

கம்பனியின் செயற்பாட்டு நாணயமாகவும் நிறுவகம் செயற்படும் அடிப்படைப் பொருளாதாரச் சூழலில் பயன்படுத்தப்படுமான இலங்கை ரூபா (இலரூபா) இல் நிதிக் கூற்றுக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்படும் சகல இலங்கை நிதித் தகவல்களும் வேறாக எடுத்துரைக்கப்பட்டால் அன்றி கிட்டிய ரூபா பெறுமதிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

**2.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்வுகள் மற்றும் எதிர்வுகூறல்கள்**

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/LKAS) அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினங்களின் அறிக்கையிடப்பட்ட தொகைகள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தில் தாக்கம் செலுத்துவனவற்றிற்கு முகாமைத்துவம் மதிப்பீடுகள், தீர்வுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்வதற்கு வேண்டப்படுகின்றது. இம் மதிப்பீடுகளினின்றும் உள்ளபடியான விளைவுகள் வேறுபடக்கூடியன. ஓர் தொடர் அடிப்படையில் மதிப்பீடுகளும் எதிர்வுகூறல்களும் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளின் மீட்பு, மதிப்பீடுகள் மீட்கப்பட்ட காலப்பகுதிக்கும் தாக்கமளிக்கும் ஏதேனும் எதிர்காலப்பகுதிகளுக்கும் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**2.4.1 ஆதனம், பொறி மற்றும் உபகரண மீள்மதிப்பீடு**

கம்பனி அதன் காணியை ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட நியாயப் பெறுமதியிலான மாற்றங்களுடன் மீள்பெறுமதியிடப்பட்ட தொகைகளில் வெளிப்படுத்துகின்றது. அரசாங்க மதிப்பீட்டாளரை கம்பனி ஈடுபடுத்தி 2007.03.12 இல் உள்ளவாறான நியாயப் பெறுமதியை நிர்ணயிக்கின்றது. மேலும் காணியின் விபரங்கள் குறிப்பு 22 இல் விளக்கப்பட்டுள்ளது.

**2.4.2 நிதியல்லாச் சொத்துக்களின் சேத இழப்பு.**

சொத்தொன்றின் கொண்டுசெல்லல் பெறுமதி அல்லது பண மீட்டல் அலகு அதன் அறவீட்டுத் தொகையை மிகைக்குமாயின் அதன் நியாயப் பெறுமதி விற்பனைக் கிரயத்திலும் அதன் பயன்பாட்டுப் பெறுமதியும் அதிகரிக்குமாயின் சேத இழப்பு வெளிப்படுத்தப்படுகின்றது. நியாய பெறுமதியிலிருந்து விற்பனைக் கிரயங்கள் கழிக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கணிப்பீடு, சொத்துக்களின் அகற்றலுக்காக பெருகும் கிரயங்களை அவதானிக்கப்பட்ட சந்தை விலைகளிலிருந்து கழித்து அல்லது அதே சொத்துக்களின் கைக்கெட்டிய கொடுக்கல் வாங்கல்களிலான விற்பனைக்கு கொடுக்கல் வாங்கல்களையும் பிணைப்பதிலிருந்தான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. பயன்பாட்டுப் பெறுமதிக் கணிப்பீடு கழிவுக் காசுப்பாய்ச்சல் முறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

**2.4.3 ஓய்வூதிய நலன்கள்**

வரையறுக்கப்பட்ட நலன் திட்டத்தின் கிரயம் உள்ளபடியான மதிப்பீடுகளைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் உள்ளபடியான விருத்திகளிலிருந்து மாறுபடக்கூடிய பல்வேறு ஊகங்களைக் கொண்டு உள்ளபடியான பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளது. இவை கழிவு விகிதம், எதிர்கால சம்பள உயர்வுகள் மற்றும் இறப்பு விகிதங்களின் நிர்ணயிப்புக்களை உள்ளடக்கியுள்ளன. மதிப்பீட்டின் சிக்கல் நிலை காரணமாகவும் அடிப்படை ஊகங்கள் மற்றும் அவற்றின் நீண்ட கால இயல்பு, ஓர் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடு இம் மாற்றங்களிற்கு மிகவும் உணர்திறன் வாய்ந்தவையாகும். சகல ஊகங்களும் ஒவ்வொரு அறிக்கைத் திகதியின் போது மீளாய்வு செய்யப்படுகின்றன.

**2.4.4 நிதிசார் கருவிகளின் நியாயப் பெறுமதி**

நிதி நிலைமைக் கூற்றில் பதியப்படும் நிதிசார் சொத்துக்களினது நிதிசார் பொறுப்புக்களினதும் நியாயப் பெறுமதி சந்தையில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாத போது அவற்றின் நியாயப் பெறுமதி கழிவுக் காசுப்பாய்ச்சல் முறை உட்பட மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றன. இம் முறைமைகளுக்கான உள்ளீடுகள் இயலுமான போது அவதானிப்புச் சந்தைகளில் இருந்து பெறப்படுகின்ற போதிலும் இயலாத போது நியாயப் பெறுமதியை ஏற்படுத்துவதற்கு நியாயப்பாடு தேவைப்படுகின்றது. திரவ இடர், கடன் இடர் மற்றும் ஏற்ற இறக்கம் போன்ற உள்ளீடுகளின் பரீசீலனைகளும் இந் நியாயங்களில் உள்ளடங்கும். இக் காரணிகள் குறித்த ஊகங்களின் மாற்றங்கள் அறிக்கையிடப்பட்ட நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதியைப் பாதிக்கின்றன.

**3. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்**

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இந் நிதிக்கூற்றுக்களில் உள்ள சகல காலப்பகுதிக்கும் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**3.1 அந்நிய செலாவணி**

**3.1.1 அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல் மீதிகள்**

அந்நிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் அவை முதற்தடவையாக அங்கீகரிக்கப்படும் திகதியில் நிலவும் செயற்படு நாணயப் புள்ளி விகிதத்தில் கம்பனியால் பதிவு செய்யப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக வகுக்கப்பட்டுள்ள நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் உருவக விடயங்களாவதுடன் இப் பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி அல்லது வழங்கல் பயன்பாட்டிற்காக ஏனையோருக்கு வாடகைக்கு அல்லது நிர்வாக நோக்கங்களுக்காகவும் எதிர்பார்க்கப்படும் அந்நிய செலாவணி, அறிக்கையிடல் திகதியிலான பரிவர்த்தனைக்கு நடைமுறை நாணய புள்ளி விகிதத்தில் மீள் பரிவர்த்தனை செய்யப்படுகின்றது. நாணய விடயங்களின் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது தீர்வுகளின் மீது ஏற்படும் இலாப நட்ட வேறுபாடுகள் அனைத்தும் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

காலக் கழிவு கிரயத்திலான மாற்றங்கள் தொடர்பிலான பரிமாற்ற வேறுபாடுகள் விபரமான வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

**3.2 ஆதனம், பொறி மற்றும் கருவிகள்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் உருவக விடயங்களாவதுடன் இப் பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி அல்லது வழங்கல் பயன்பாட்டிற்காக ஏனையோருக்கு வாடகைக்கு அல்லது நிர்வாக நோக்கங்களுக்காகவும் ஒரு வருட காலத்திற்கு மேலான காலத்திற்காகப் பயப்படுத்தப்பட எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்திலும் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட சேத இழப்புகள் ஏதேனும் இருப்பின் மதிப்பீடப்பட்டு காணி நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

**3.2.1 ஏற்பிசைவின் அடிப்படை**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் சொத்துக்களுடன் தொடர்புபட்ட எதிர்காலப் பொருளாதார நலன்கள் கம்பனிக்குள் பாய்ச்சப்படும் இயலுமையும் சொத்தின் கிரயம் நம்பகரமான முறையில் அளவிடப்படக் கூடியவிடத்து ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**3.2.2 ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆரம்பத்தில் கிரயத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் அச் சொத்துக்களை குறித்த இடத்திற்குக் கொண்டுவருவதற்காக நேரடியாக ஏற்கப்படும் ஏதேனும் கிரயங்கள் உள்ளடங்கலாக குறித்த பாவனைக்குத் தயாரான நிலைக்கு கொண்டுவரப்படும் வரையில் ஏற்பட்ட அனைத்து செலவினங்களையும் உள்ளடக்கியதாகக் கணிப்பிடப்படும்.

சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயத்தில் பொருட்களின் கிரயம் மற்றும் நேர் ஊழியம், அச் சொத்துக்களை குறித்த இடத்திற்குக் கொண்டுவருவதற்காக நேரடியாக ஏற்கப்படும் ஏதேனும் கிரயங்கள் மற்றும் பொருட்கள் கழற்றப்பட்டு, அகற்றப்பட்டு அவை இருக்க வேண்டிய இடங்களில் மீளப் பொருத்தப்படுவதற்கான கிரயங்களும் உள்ளடக்கப்படுகின்றன.

**3.2.3 தொடர்ந்து வரும் கிரயங்கள்**

செலவினங்களுடன் தொடர்புற்ற எதிர்காலப் பொருளாதார நலங்கள் கம்பனிக்குப் பாய்ச்சப்படுவதற்கான வாய்ப்புக் குறைகையில் மாத்திரமே தொடர்ந்துவரும் செலவினங்கள் மூலதனமாக்கப்படுகின்றன. தற்போதுள்ள பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புக்கள் ஏற்கப்பட்ட செலவினங்களாகக் கருதப்படுகின்றன.

**3.2.4 மீள்மதிப்பீட்டு மாதிரி**

கம்பனி சகல இறையில் காணி கட்டிடங்களிற்கும் மீள்மதிப்பீட்டு மாதிரியைப் பிரயோகிக்கின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 2007.03.12 ஆம் திகதியான மீள்பெறுமதியிடப்பட்ட திகதியில் உள்ளவாறான நியாயப் பெறுமதியில் இருந்து ஏதேனும் தொடர்ந்துவரும் திரண்ட பெறுமானத்தேய்வுகளும் தொடர்ந்துவரும் சேத இழப்புகளும் கழிக்கப்பட்டு அவை பெறுமதியிடப்பட்டுள்ளன.

கம்பனியின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 2012 மார்ச் 31 இற்கு முன்னரான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படி தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் மீள் பெறுமதியிடப்பட்ட தொகையில் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

### 3.2.5 கிரய மாதிரியைத் தேர்வு செய்தல்

காணி கட்டிடங்கள் 2007.03.12 ஆம் திகதிய மீள்மதிப்பீட்டுத் திகதிய நேர் கிரயத்திலும் இவை தவிரந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கு மீள்மதிப்பிடப்பட்ட தொகையைத் தேர்வு செய்துள்ளன. இதன் படி, காணி கட்டிடங்கள் தவிர்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நிகர் நிலைக் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வும் ஏதேனும் திரண்ட சேத இழப்புகளும் கழிக்கப்பட்டதை அடுத்து பதியப்பட்டுள்ளன.

கம்பனி காணி கட்டிடங்களை மீள்மதிப்பிடப்பட்ட தொகைகளில் கணிப்பிட்டு உரிமையாண்மைக் கூற்றில் நியாயப் பெறுமதி மாற்றங்கள் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன. கம்பனி அரசாங்க பிரதான மதிப்பீட்டாளரை காணி கட்டிடங்களின் நியாயப் பெறுமதியை நிர்ணயிக்கும் பொருட்டு 2007.03.12 ஆம் திகதி ஈடுபடுத்தியிருந்தது.

### 3.2.6 குறை ஏற்பிசைவு (derecognition)

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஓர் விடயத்தின் கொண்டு செல்லல் தொகை அகற்றலின் போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார நலன்கள் இல்லாத போது குறைஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஒரு விடயம் குறை ஏற்பிசைவு செய்யப்படுகையில் குறை ஏற்பிசைவின் மூலம் பெறப்படும் இலாபம் அல்லது நட்டம் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் ஓர் விடயத்தின் பதிலீட்டுக் கிரயங்கள் கொண்டு செல்லல் தொகையில் ஏற்பிசைவு செய்யப்படுகையில் பதிலீடு செய்யப்பட்ட தொகையில் எஞ்சிய கொண்டுசெல்லல் தொகை குறைஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 3.2.7 பெறுமானத்தேய்வு

ஓர் சொத்தின் பெறுமானத்தேய்வு அது பயன்பாட்டிற்கு ஆயத்தமானதிலிருந்து ஆரம்பமாகின்றது. அதாவது, முகாமைத்துவத்திற்குத் தேவையான வகையில் செயற்பாட்டிற்கு உரித்தாக தேவையான நிலையில் குறித்த இடத்தில் உள்ளபோதாகும். சொத்தொன்று விற்பனைக்காக உள்ள திகதி அல்லது சொத்து குறை ஏற்பிசைவு செய்யப்பட்ட திகதி இவற்றில் முந்நிய திகதியில் இருந்து ஓர் சொத்தின் பெறுமானத்தேய்வீடு நிறைவு பெறும் சொத்தொன்று விளைவற்றுள்ளபோதோ அல்லது முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்டாலன்றி அதன் செயற்படு பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டாலோ பெறுமானத்தேய்விலிருந்து நிறைவுற மாட்டாது.

காணி பெறுமானத்தேய்விடப்படுவதில்லை. ஏனைய சொத்துக்களின் மீதான பெறுமானத்தேய்வு பின்வரும் வீதங்களில் கம்பனியால் நுகரப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் சொத்துக்களின் எதிர்காலப் பொருளாதார நலன்களின் வடிவை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்கு உரித்தான காலப்பகுதிகளுக்காக நேர் முறையில் கணிப்பிடப்படுகின்றன.

அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலமும் எஞ்சிய பெறுமதியும் ஒவ்வொரு அறிக்கையிடற் காலப்பகுதியின் போதும் மீளாயப்படுகின்றன. நடைமுறை மற்றும் ஒப்பீட்டுக் காலப்பகுதியின் போதான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலங்கள் பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 20 ஆண்டுகள் |
| இயந்திர உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 05 ஆண்டுகள் |
| அலுவலக தளபாடம் | 10 ஆண்டுகள் |
| வேலைத்தள கருவிகள் | 05 ஆண்டுகள் |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| கணனி உதிரிப் பாகங்கள் | 05 ஆண்டுகள் |

சொத்தொன்றின் கொண்டு செல்லல் தொகை மதிப்பிடப்பட்ட அறவிடப்பட வேண்டிய தொகையைப் பார்க்கிலும் அதிகமாக இருக்கையில ஓர் சொத்தின் கொண்டு செல்லல் தொகை உடனடியாக அதன் அறவிடப்பட வேண்டிய தொகைக்கு குறைத்தெழுதப்படுகின்றது.

### 3.2.8 நிதிசாரா சொத்துக்களின் சேத இழப்பு

இருப்புகள் மற்றும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் தவிர்ந்த கம்பனியின் ஏனைய நிதிசாராச் சொத்துக்களின் கொண்டுசெல்லல் பெறுமதியும் சேதஇழப்பிற்கான ஏதேனும் சாத்தியம் உள்ளதா என்பதனை நிர்ணயிக்கும் பொருட்டு ஒவ்வொரு அறிக்கைத் திகதியின் போதும் மீளாய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய ஏதேனும் சாத்தியம் இருப்பின், அறவிடப்பட வேண்டிய சொத்துக்களின் தொகை மதிப்பிடப்படுகின்றது. ஓர் சொத்தின் கொண்டு செல்லல் தொகை அல்லது அதன் காசு உருவாக்கல் அலகானது அதன் மதிப்பிடப்பட்ட அறவிடப்பட வேண்டிய தொகையை விட மிகைக்குமாயின் சேத இழப்பாக ஏற்பிசையப்படுகின்றது.

ஓர் சொத்தின் பயன்பாட்டுப் பெறுமதி மற்றும் நியாயப் பெறுமதியிலிருந்து விற்பனைக்கான கிரயம் கழிக்கப்பட்டதைப் பார்க்கிலும் உள்ள மிகை அதன் அறவிடப்பட வேண்டிய தொகை அல்லது காசு உருவாக்கல் அலகாகும். பயன்பாட்டுப் பெறுமதியை மதிப்பிடுகையில் சொத்துக்களுக்கு குறிப்பிடப்பட்ட இடர்கள் அல்லது காசு உருவாக்கல் அலகிற்கும் பணத்தின் நேரப் பெறுமதியின் நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கும் முன் வரி கழிவு விகிதங்கள் பயன்படுத்தப்பட்டு அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் கழிவிடப்படுகின்றன. அவற்றின் சேத இழப்பு பரீட்சிப்பு நோக்கத்திற்காக தனியாக பரீட்சிக்கப்பட முடியாத சொத்துக்கள் ஏனைய சொத்துக்கள் அல்லது காசு உருவாக்கல் அலகுகளின் காசு உட்பாய்ச்சலின் பாரிய சுதந்திரத்தன்மையுடன் தொடர்ந்து பயன்படுத்தப்படுவதன் மூலம் காசு உட்பாய்ச்சலை உருவாக்கும் மிகச் சிறிய சொத்துத் தொகுதிகளாகத் தொகுக்கப்படுகின்றன.

ஓர் சொத்தின் அறவிடப்பட வேண்டிய தொகை (அல்லது காசு உருவாக்கல் அலகு) அதன் கொண்டு செல்லல் தொகையை விடக் குறைவாக மதிப்பிடப்படின் அச் சொத்தின் கொண்டு செல்லல் தொகை (அல்லது காசு உருவாக்கல் அலகு) அதன் அறவிடப்பட வேண்டிய தொகைக்குக் குறைக்கப்படுகின்றன. ஓர் சேத இழப்பானது விபரமான வருமானக் கூற்றில் உடனடியாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

நன்மதிப்பு தவிர்ந்த ஏனைய சொத்துக்கள் தொடர்பாக, முன்னைய காலப்பகுதியின் போது ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்புகள் அச் சொத்துக்கள் குறைவாகும் அல்லது தொடர்ந்து நிலவாதமைக்கான ஏதேனும் சாத்தியங்கள் இருப்பின் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் மதிப்பிடப்படுகின்றன. அறவிடப்பட வேண்டிய தொகை நிர்ணயிக்கையில் பயன்படுத்தப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றங்கள் இருப்பின் ஓர் சேத இழப்பு எதிர்நிலைக்கு மாற்றப்படுகின்றது. ஓர் சேத இழப்பு ஏற்பிசைவு செய்யப்படாவிடின், பெறுமானத்தேய்வு அல்லது காலக்கழிவின் தேறிய தொகையில் நிர்ணயிக்கப்படும் கொண்டு செல்லல் தொகையை விஞ்சாத சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகையின் அளவிற்கு மாத்திரமே ஓர் சேத இழப்பு எதிர்நிலைக்கு மாற்றப்படுகின்றது.

### 3.3 அருவகச் சொத்துக்கள்

தொடர்புபட்ட உபகரணத்தின் செயற்பாட்டுடன் ஒன்றினைந்த கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் கணனி உபகரணத்தின் பாகமாக மூலதனமாக்கப்படுகின்றது.

### 3.4 மூலதன குறை வேலை

ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு பூர்த்திசெய்யப்படாத ஆண்டின் போது உறப்பட்ட மூலதனச் செலவினங்கள் மூலதனக் குறைவேலையாகக் காண்பிக்கப்படும் அதே வேளை ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ள மூலதனச் சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கு மாற்றப்பட்டுள்ளன.

### 3.5 நடைமுறைச் சொத்துக்கள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையாக வகைப்படுத்தப்பட்ட சொத்துக்கள் காசும் வங்கி மீதிகளும் மற்றும் வழமையான செயற்பாட்டுச் சுற்றோட்டத்தின் போது காசாக தேறக்கூடியதாக எதிர்பார்க்கப்பட்ட அல்லது நிதி நிலைமைக் கூற்றுத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் இதில் எது குறுகியதாகும்.

### 3.5.1 இருப்புகள் - நேர் மற்றும் கலவை உரங்கள்

இருப்புகள் (நேர் மற்றும் கலவை உரங்கள்) கிரயத்திலிருந்து மானியத்தொகை கழிக்கப்பட்டு குறிப்பிடப்படுகின்றது. முதல் வந்து முதல் போகும் (FIFO) முறையில் கிரயம் நிர்ணயிக்கப்படுகின்றது. கலவை உரக் கிரயம், மூலப் பொருட்கள், நேர் ஊழியம், ஏனைய நேர் கிரயங்கள் மற்றும் தொடர்புபட்ட உற்பத்தி மேந்தலைகளை உள்ளடக்கியதாகும். உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட இருப்புகள் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. தேறிய கைக்கெட்டிய பெறுமதியானது வழமையான வியாபாரச் சூழலிலான மானியப் பெறுமதியிலிருந்து பிரயோகிக்கப்பட்ட விற்பனைச் செலவினங்கள் கழிக்கப்பட்டதாகும்.

பொதி செய் பொருட்களும் நுகர்வு விடயங்களும் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3.6 நிதிக் கருவிகள்

### 3.6.1 மூலத்திலிருந்து அல்லாத நிதிச் சொத்துக்கள்

ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்

கம்பனி, நிதிக் கருவிகளின் ஒப்பந்த ஏற்பாடுகளிற்கான ஓர் தரப்பினரானதும் மாத்திரமே நிதிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஆரம்ப ஏற்பிசைவில் அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை கம்பனி நிர்ணயிக்கின்றது. நிதிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகையில் நியாயப் பெறுமதியுடன் நேரடியாக காரணமான கொடுக்கல்வாங்கல் கிரயங்கள் கூட்டப்பட்டு கணிப்பிடப்படுகின்றன. எவ்வாறெனினும், இலாப நட்டங்களினூடாக நியாயப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களைக் கருத்திற்கொள்கையில் நேரடியாகக் காரணமான கொடுக்கல்வாங்கல் கிரயங்கள் கருத்திற்கொள்ளப்படுவதில்லை.

வகைப்படுத்தல் மற்றும் தொடர்ந்து வரும் அளவீடும்
ஆரம்பத்தில் ஓர் நிலையான சொத்து பின்வரும் ஒரு வகையில் வகைப்படுத்தப்படுகின்றது.

அ. வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)
ஆ. கடன்களும் பெறவேண்டியவைகளும்
இ. இலாப நட்டங்களினூடாக நியாயப் பெறுமதியில்
ஈ. விற்பனைக்காக உள்ளவை (AFS)

#### 3.6.1.1 வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)

வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் வழிவராத நிதிச் சொத்துக்களாகும். இவை நிர்ணயிக்கப்பட்ட அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளாவதுடன் கடன்கள் மற்றும் பெறவேண்டியவை தவிர்ந்த ஏனையவை முதிர்வு நிர்ணயிக்கப்பட்டவையாகும். கம்பனி சாதகமான கருத்தையும் முதிர்வு வரை அவற்றை வைத்துக்கொண்டு விற்பனைக்காக உள்ளவையாக அல்லது இலாப நட்டத்தின் மூலம் நியாயப் பெறுமதியில் உள்ளவாறு நிர்ணயிக்கப்படாதவை முதிர்வு முதலீடுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் பதியப்படுகின்றன.

#### 3.6.1.2 கடன்களும் பெறவேண்டியவைகளும்

கடன்களும் பெறவேண்டியவைகளும் வழிவரா நிதிச் சொத்துக்களாவதுடன் இவை நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளைக் கொண்ட நடைமுறைச் சந்தை ஒன்றில் கோரப்படாதும் கம்பனியால் உடனடியாக அல்லது அண்மித்த காலப்பகுதியின் போது விற்பனை செய்யப்படுவதற்கு அல்லாதவையாகும். நடைமுறையல்லாத சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியை அடுத்துள்ள 12 மாதங்களிற்கு மேற்பட்ட முதிர்வுக் காலத்திற்கானவை தவிர்ந்த கடன்களும் பெறவேண்டியவைகளும் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கம்பனியின் கடன்களும் பெறவேண்டியவைகளும் அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியிலான பெறவேண்டிய மானியம், வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள், அரசாங்க பிணைகள், நிலையான வைப்புகள், முற்கொடுப்பனவுகள், முற்பணங்கள், வைப்புகள், ஊழியர்களுக்கான கடன்கள் மற்றும் காசும் காசிற்குச் சமனானவைகளையும் உள்ளடக்கியுள்ளன.

நிதியாண்டின் போது இலாப நட்டங்களினூடாக நியாயப் பெறுமதியிலும் விற்பனைக்காக உள்ளவையாகவும் சொத்துக்கள் எவையும் வகைப்படுத்தப்படவில்லை.

### 3.6.2 தொடர்ந்துவரும் அளவீடுகள்

கீழே வரையறுக்கப்பட்டவாறு நிதிச் சொத்துக்களின் தொடர்ந்துவரும் அளவீடுகள் அவற்றின் வகைப்படுத்தலைச் சார்ந்தவையாகும்.

#### 3.6.2.1 வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)

வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் ஆக்கபூர்வமான வட்டிமுறையைப் பயன்படுத்தி காலக்கழிவு கிரயத்தில் பின்னர் அளவிடப்படுகின்றன. காலக்கழிவுக் கிரயம் கழிவு அல்லது கொள்வனவு மற்றும் கொடுக்கல்வாங்கல் கிரயங்கள் மீதான வட்டம் அல்லது கழிவை கருத்திற்கொண்டே கணிப்பிடப்படுகின்றன.

### 3.6.2.2 கடன்களும் பெறவேண்டியவைகளும்

ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் கடன்களும் பெறவேண்டியவைகளும் ஆக்கபூர்வமான வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவிற்கான படிப்பணத்தை கழித்து காலக்கழிவு கிரயத்தில் அளவிடப்படுகின்றன. காலக்கழிவுக் கிரயம் ஆக்கபூர்வமான வட்டி வீதத்தின் ஒன்றிணைந்த பாகமான கிரயங்கள் அல்லது கட்டணங்கள் மற்றும் கொள்வனவின் மீதான ஏதேனும் கழிவு அல்லது வட்டத்தையும் கருத்திற்கொண்டே கணிப்பிடப்படுகின்றன. ஆக்கபூர்வமான வட்டி வீத காலக்கழிவு நிதி வருமானமாக இலாபம் அல்லது நட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 3.6.2.3 குறை ஏற்பிசை

கம்பனி நிதிச் சொத்துக்களில் இருந்தான காசுப்பாய்ச்சலிற்கான ஒப்பந்த உரிமைகள் முடிவுறுகையில் அல்லது கணிசமாக ஓர் கொடுக்கல்வாங்கல்கள் நிதிச் சொத்தை மாற்றுகையில் நிதிச் சொத்துக்களை குறைஏற்பிசைவு செய்கின்றது.

நிதிச் சொத்துக்களின் அனைத்து உரிமைகளின் இடர்களும் வெகமதிகளும் மாற்றப்பட்டு அல்லது கம்பனி நிதிச் சொத்துக்களின் கட்டுப்பாட்டைக் கொண்டிராது உரிமைகளின் சகல இடர்களையும் வெகுமதிகளையும் கணிசமான அளவில் கொண்டிராத போதுமாகும். மாற்றப்பட்ட நிதிச் சொத்துக்களின் ஏதேனும் வட்டி கம்பனியால் உருவாக்கப்பட்டு அல்லது தக்க வைத்துள்ள குறை ஏற்பிசைவிற்காக தகைமை பெற்றவை வேறான சொத்து அல்லது பொறுப்பாக நிதி நிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது. ஓர் நிதிச் சொத்தின் குறை ஏற்பிசைவில், சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதிக்கும் (அல்லது மாற்றப்பட்ட சொத்தின் பகுதிக்காக ஒதுக்கப்பட்ட கொண்டு செல்லல் தொகை), பெறப்பட்ட கருத்தையும் (பெறப்பட்ட ஏதேனும் புதிய சொத்து உள்ளடங்கலாக ஏதேனும் எதிர்வுகூறப்பட்ட புதிய பொறுப்பைக் கழித்து) இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. கம்பனி ஓர் நிதிப் பொறுப்பை அதன் ஒப்பந்தக் கடப்பாடு வெளிப்படுத்தப்பட்டதும் அல்லது இரத்துச் செய்யப்பட்டதும் அல்லது காலாவதியானதும் குறை ஏற்பிசைவு செய்கின்றது.

### 3.6.3 நிதிச் சொத்துக்களின் சேதம்

**காலக்கழிவுக் கிரயத்தில் கொண்டு செல்லப்படும் சொத்துக்கள்**

காலக்கழிவு கிரயத்தில் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துக்களுக்காக கம்பனி தனியாக முக்கியத்துவம் வாய்ந்த நிதிச் சொத்துக்களுக்காக தனியாக உள்ள புறநிலைச் சான்றுகள் உள்ளனவா என்பது குறித்து அல்லது தனியாக முக்கியத்துவம் பெறாத நிதிச் சொத்துக்களுக்காக ஒன்றித்தும் அறிக்கையிடற் காலப்பகுதியின் இறுதியில் மதிப்பீடு செய்கின்றது. நிதிச் சொத்து தனியாக மதிப்பிடுகையில் சேதத்திற்கான புறநிலை சான்று இல்லை என கம்பனி நிர்ணயித்திருப்பின் முக்கியமாக இருப்பினும் இல்லாவிடினும் சேதத்திற்காக ஒன்றித்து அவை மதிப்பிடப்பட்டு ஒத்த கடன் இடர் பண்புகளுடன் நிதிச் சொத்துக்களின் ஓர் தொகுப்பாக சொத்தை உள்ளடங்குகின்றது.

சொத்தின் ஆரம்ப ஏற்பிசைவை அடுத்து நேர்ந்த ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட சம்பவங்களின் விளைவாக (ஓர் இழப்புச் சம்பவம்) மற்றும் அவ் இழப்பு சம்பவம் (அல்லது சம்பவங்கள்) நம்பகமான முறையில் மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்துக்களின் எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் மீதான ஓர் தாக்கத்தைக் கொண்ட சேதம் நேர்ந்தமைக்கான புறநிலைச் சான்றுகள் இருந்தால் மாத்திரமே ஓர் நிதிச் சொத்து சேதமாகக் குறிப்பிடுகின்றது. இழப்பின் தொகை சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக்கும் (இதுவரை உறப்படாத எதிர்கால எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக்கள் தவிர்ந்த) இடையிலான வேறுபாடாக அளவிடப்படுகின்றன. மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதி நிதிச் சொத்துக்களின் மூல ஆக்கபூர்வ வட்டி வீதத்தில் கழிவிடப்படுகின்றது.

காலக்கழிவு கிரயத்தில் கொண்டு செல்லப்படும் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளுக்காகவும் வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகளுக்காகவும் இழப்புத் தொகை (இது வரை உறப்படாத எதிர்கால கடன் இழப்புக்கள் தவிர்ந்த) சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாகக் கணிப்பிடப்பட்டு நிதிச் சொத்துக்களின் மூல ஆக்கபூர்வ வட்டி வீதத்தில் கழிவிடப்படுகின்றது. நிதிச் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகை குறைக்கப்பட்டு இழப்புத் தொகை விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து வரும் காலப்பகுதியில் சேத இழப்பு குறையுமாயின் அக் குறைவானது சேதம் ஏற்பிசைவு செய்யப்பட்டதை அடுத்து நேர்ந்த ஓர் சம்பவத்துடன் புறநிலையாக தொடர்புபடுத்தப்படக் கூடியதாகக் காணப்பட்டால் முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்பின் மீளல் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

கம்பனி, பெறவேண்டியவைகளுக்காக சேதத்தின் சான்றை குறித்த சொத்திலும் தொகுதியான நிலையிலும் கருத்திற்கொள்கின்றது. சகல தனியான குறிப்பிடத்தக்க பெறவேண்டியவைகளும் குறித்த சேதத்திற்காக மதிப்பிடப்படுகின்றன. தனியாக முக்கியத்துவம் பெறாத கடன்களும் பெறவேண்டியவைகளும் ஒரே தன்மையைக் கொண்ட இடர் தன்மையினதான பெறவேண்டியவற்றுடன் தொகுக்கப்பட்டு தொகுதியாக மதிப்பிடப்படுகின்றன.

கூட்டாக சேதத்தைக் கணிப்பிடுகையில் கம்பனி – தவறப்பட்டதன் நிகழ்தகவில் வரலாற்றுப் போக்குகளைப் பயன்படுத்தி அறவீடுகளின் நிகழ்வு நேரம் மற்றும் ஏற்பட்ட இழப்பின் தொகை உள்ளபடியான இழப்புக்கள் வரலாற்றுப் போக்குகளால் பரிந்துரைக்கப்பட்டதைப் பார்க்கிலும் அதிகமாக அல்லது குறைவாக இருக்கும் கடன் நிலைமைகள் மற்றும் நடைமுறைப் பொருளாதாரங்களைப் பொறுத்த வரையில் முகாமைத்துவ தீர்வுகளிற்காக சிராக்கப்படுகின்றன.

இழப்புக்கள் இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளுக்கு எதிராக ஓர் படிப்பணக் கணக்கில் பிரதிபலிக்கப்படுகின்றன. தொடர்ந்து வரும் சந்தர்ப்பம் சேத இழப்புத் தொகையைக் குறைப்பதற்குக் காரணமாயின் (உதாரணம் : ஓர் கடன்பட்டோரால் மீளகொடுப்பனவு) சேத இழப்பின் குறைவு இலாப நட்டத்தினூடாக மீட்கப்படுகின்றது.

### 3.7 நிதிப் பொறுப்புக்கள்

#### 3.7.1 வழிவரா நிதிப்பொறுப்புக்கள்

##### 3.7.1.1 ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்

நிதிக்கருவிகளின் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளிற்கு ஓர் தரப்பாக உள்ளானதை அடுத்து மாத்திரமே எஸ்எல்எப்ஆர்எஸ் / எல்கேஏஎஸ் இன் நோக்கெல்லைக்குள் நிதிப்பொறுப்புக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. நிதிப் பொறுப்புக்கள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியுடன் நிதிப் பொறுப்புக்கள் இலாப நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நிதிப்பொறுப்புக்களாகவும் ஏனைய நிதிப்பொறுப்புக்கள் ஆகிய இரு வகைகளில் வகைப்படுத்தப்படக் கூடியதைக் கூட்டி ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. கம்பனி அதன் நிதிப் பொறுப்புக்களை ஏனைய நிதிப் பொறுப்பு வகையாக வகைப்படுத்தி உள்ளது.

#### 3.7.2 எதிரீடு

கம்பனியால் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகளை எதிரீடு செய்யக்கூடிய சட்ட உரிமை இருந்து ஒன்றில் அது தேறிய அடிப்படை ஒன்றினால் எதிரீடு செய்யப்படுவதற்கு அல்லது சொத்தை ஏற்பிசைவு செய்து பொறுப்பை ஒரே முறையில் தீர்ப்பதற்கு முனைந்திருந்தால் மாத்திரமே நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்பட்டு தேறிய தொகை ஒன்றிணைந்த நிதி நிலைமைக் கூற்றில் எதிரீடு செய்ய முடியும். வருமானமும் செலவினங்களும் அல்லது கம்பனியின் வியாபார நடவடிக்கையில் அத்தகைய ஒரே வகையிலான கொடுக்கல் வாங்கல்களில் ஓர் தொகுதியில் இருந்தான இலாபங்களும் நட்டங்களும் எல்கேஏஎஸ்.்.எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் கீழ் அனுமதிக்கப்பட்டிருந்தால் மாத்திரமே தேறிய அடிப்படை ஒன்றில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

### 3.8 வியாபார பெறவேண்டியவைகள்

வழமையான வியாபாரத்தின் போது பொருட்களின் விற்பனைக்காக நுகர்வோரிடம் இருந்தான நிலுவைத் தொகைகள் வியாபார பெறவேண்டியவைகளாகின்றன. சேகரிப்புக்கள் வியாபாரத்தின் வழமையான செயற்பாட்டுச் சுற்றோட்டத்தில் எதிர்பார்க்கப்படுவதுடன் அவை நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. வியாபார பெறவேண்டியவைகள் ஆரம்பத்தில் பட்டியல் பெறுமதியான நியாயப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

வியாபார பெறவேண்டியவைகள் ஆரம்பத்தில் பட்டியல் பெறுமதியான நியாயப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்பட்டு பின்னர் மூலப்பட்டியல் பெறுமதியில் இருந்து சேதங்கள் கழிக்கப்பட்டு அளவிடப்படுகின்றன.

கம்பனி ஒவ்வொரு அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியிலும் வியாபார பெறவேண்டியவைகள் சேதப்படுத்துவதற்கான புறநிலை சான்று உள்ளதா என மதிப்பிடப்படுகின்றது. வியாபாரப் பெறவேண்டியவைகளுக்கான சேதத்தின் புறநிலை சான்றுகள் கம்பனியின் கொடுப்பனவுகளின் சேகரிப்புக் குறித்த கடந்த அனுபவங்களையும் கம்பனி உள்ளடக்க கூடியதுடன் ஆகக்கூடுதலான கடன் காலப்பகுதி 90 நாட்களைக் கடந்த தாமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளின் எண்ணிக்கையில் ஓர் அதிகரிப்புக் காணப்பட்டது. வியாபார பெறவேண்டியவைகள் சேதமடைந்தமைக்கான புறநிலை சான்று இருந்தால் மாத்திரமே சேதங்களும் சேத இழப்புக்களும் உறப்படுகின்றன. சகல வியாபார பெறவேண்டியவைகளும் சேதத்திற்காக தனியாக மதிப்பிடப்படுகின்றன.

சேதத்திற்காக வியாபார பெறவேண்டியவைகளின் மாதிரிகள் மற்றும் அடிப்படை பின்வருமாறாகும் :

தனிப்பட்ட மதிப்பீட்டு மாதிரி : சேத இழப்பைக் கணிப்பிடுவதற்கு பின்வரும் வியாபாரப் பெறவேண்டியவைகளின் வழிகள் தனியாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

i. பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்
ii. மனநல சேவை நிலையங்கள்
iii. அங்கீகரிக்கப்பட்ட பிரமுகர்கள்
iv. அரசாங்க நிறுவகங்களும் திணைக்களங்களும்

### 3.9 காசும் காசிற்கு சமமானவைகளும்

காசுப் பாய்ச்சல் கூற்றில், காசும் காசுக்கு சமமானவைகளிலும் கையிலுள்ள காசு, வங்கியில் உள்ள அழைப்பு வைப்புக்கள், மூன்று மாதங்கள் அல்லது குறைவான மூல முதிர்வுடனான ஏனைய குறுங்கால உயர் திரவத்தன்மை முதலீகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 3.10 கூறப்பட்ட மூலதனம்

பொதுத் திறைசேரிக்கும் இலங்கை அரசாங்க பொதுத் திறைசேரிக்கும் வழங்கப்பட்ட சாதாரண பங்குகள், உரிமையாண்மையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.11 வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்

கடன் கொள்வனவு, வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் மற்றும் வங்கி மேலதிகப் பற்று என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் கொடுக்கல் வாங்கல் விலையான நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு பின்னர் ஓர் குறுகிய காலப் பகுதியில் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதால் பணத்தின் நேரப் பெறுமதி முக்கியம் இன்மையால் மூலப்பட்டியல் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

வழங்குனர்களிடம் இருந்து வழமையான வியாபாரச் சூழலில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்காகச் செலுத்தப்பட வேண்டிய கடப்பாடுகள் வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகள் ஆகும். வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் சாதாரண வியாபாரச் செயற்பாட்டு சுற்றோட்டத்தில் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

### 3.12 இரவல்கள்

#### 3.12.1 ஆரம்ப ஏற்பிசைவு

இரவல்கள் நியாயப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்பட்டு தேறிய கொடுக்கல் வாங்கல்கள் கிரயங்களில் ஏற்கப்படுகின்றன. இரவல்கள் பின்னர் செயல்முறையிலான வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவுக் கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றன.

#### 3.12.2 பின்தொடர் அளவீடு மற்றும் ஏற்பிசைவு

கம்பனி வழிவரும் நிதிப் பொறுப்பை ஏனைய நிதிப் பொறுப்புக்களாகவும் வகைப்படுத்தப்படுகின்றது. அத்தகைய நிதிப் பொறுப்புக்கள் நியாயப் பெறுமதியுடன் ஏனைய நேரடியாக பெறத்தக்க கொடுக்கல்வாங்கல் கிரயங்களையும் கூட்டி ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர், இந் நிதிப் பொறுப்புக்கள் வட்டியைக் கொண்ட கடன்களையும் இரவல்களையும் உள்ளடக்கி செயன்முறையிலான வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவுக் கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றன. இலாபங்களும் நட்டங்களும் பொறுப்புக்கள் குறைஏற்பிசைவு செய்யப்படுகையில் இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

#### 3.12.3 இரவல் கிரயம்

இரவல் கிரயத்தின் விபரமான வருமானக் கூற்றில் அவை உறப்பட்ட காலப்பகுதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 3.12.4 அரசாங்க மானியங்கள் மற்றும் கொடைகள்

மானியங்கள் பெறப்படும் எனவும் கம்பனி சகல இணைந்த நிபந்தனைகள் குறித்தும் நியாயமான உத்தரவாதம் உள்ளபோது அரசாங்கத்திலிருந்தான மானியங்கள் அவற்றின் நியாயப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

இறக்குமதி கிரயங்கள் தொடர்பான உர மானியங்கள் அவை ஈடுசெய்யப்படும் நோக்கிலான கிரயங்களுக்கு நிகராக விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஏற்கனவே உறப்பட்ட இறக்குமதிக் கிரயங்களிற்கு ஈடு செய்யப்படுவதற்கான உர மானியங்கள், மானியங்கள் பெறப்பட முடியும் என்பதற்கு நியாயமான உறுதிப்பாடு இருப்பின் பெறவேண்டிய மானியமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஆதன, இயந்திர உபகரணங்களுடன் தொடர்பான அரசாங்க மானியங்கள் பிற்போடப்பட்ட அரசாங்க மானியங்களாக நடைமுறையல்லாப் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டு தொடர்புபட்ட சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட வாழிவுக் காலத்திற்கு ஓர் நேர்கோட்டு அடிப்படையில் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 3.13 கூட்டு வரி மற்றும் பிற்போடப்பட்ட வரி

கம்பனி வருமான வரிகளுக்கு உட்பட்டதாகும். இறுதி வரி விளைவானது ஆரம்பத்தில் அவை பதியப்பட்ட தொகையைப் பார்க்கிலும் வேறுபடக்கூடிய வரிக்குட்ட வருமானத்தின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு முன்கருதப்பட்ட வரிகளுக்காக பொறுப்புக்களை கம்பனி ஏற்பிசைவு செய்கின்றது.

வேறுபாடானது அதன் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வருமான சரியைத் தாக்கம் செலுத்தக்கூடியதாகும். அத்தகைய வேறுபாடு, உறுதிப்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியிலான நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் தாக்கம் செலுத்தக்கூடியனவாகும்.

காலப்பகுதிக்கான வரிச் செலவினங்கள் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரியை உள்ளடக்கியுள்ளன. ஏனைய விபரமான வருமானத்தில் அல்லது உரிமையாண்மையில் நேரடியாக ஏற்பிசைவு செய்யப்பட்ட விடயங்கள் அல்லது ஏற்பிசைவு செய்யப்பட்ட விடயங்களுடன் தொடர்புபட்ட வரை தவிர விபரமான வருமானக் கூற்றில் வரி ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. இச் சந்தர்ப்பத்தில் வரியும் ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 3.13.1 நடைமுறை வருமான வரி

நடைமுறை வருமான வரிக கட்டணமானது, கடந்த ஆணடுகள் தொடர்பாக செலுத்த வேண்டிய வரிக்கான ஏதேனும் சீராக்கங்களும் கம்பனிக்குப் பொருத்தமான அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியில் அமுலாக்கப்பட்ட வரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்களின் அடிப்படையில் கணிப்பிடப்படும் வரி அல்லது பெறவேண்டிய வரியாகும். உரிமை மூலதனத்துடன் நேரடியாக ஏற்பிசைவு செய்யப்பட்ட விடயங்களுடன் தொடர்பான நடைமுறை வருமான வரி இலாப நட்டத்தில் அல்லது உரிமை மூலதனத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

பொருத்தமான போது முகாமைத்துவம் வரி அதிகாரிகளுக்குச் செலுத்த வேண்டியதாக எதிர்பார்க்கப்பட்ட தொகையின் அடிப்படையில் மதிப்பீடுகளை மேற்கொள்கிறது. பொருத்தமான வேளையில் சந்தர்ப்பங்களிற்கு ஏற்றவாறு வரிப் பிரமாணங்கள் விலக்கப்பட்டு ஏற்பாடுகள் முறைப்படி மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.13.2 பிற்போடப்பட்ட வரி

நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லல் தொகைக்கும் வரி நோக்கங்களுக்காக அல்லது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் கொண்டு செல்லப்படும் தொகைகள் தவிர்ந்தவைக்கும் இடையில் ஏற்படும் தற்காலிக வரி வேறுபாடுகள் பிற்போடப்பட்ட வரியாகும்.

(அ) நன்மதிப்பின் ஆரம்ப ஏற்பிசைவு அல்லது
(ஆ) ஓர் கொடுக்கல் வாங்கலில் ஓர் சொத்து அல்லது பொறுப்பின் ஆரம்ப ஏற்பிசைவானது

i. ஓர் வியாபாரத்தின் ஒருங்கிணைப்பாக அல்லாத வகையிலும்
ii. கொடுக்கல் வாங்கல் வேளையில் கணக்கீட்டு இலாபத்தை அல்லது வரிக்குட்படத்தக்க இலாபத்தை தாக்காத வகையிலுமானவையாகும்.

கொடுக்கல் வாங்கல் கணக்கீட்டின் போது அல்லது வரி இலாப அல்லது நட்டத்தைத் தாக்கும் வேளையில் ஓர் வியாபார ஒருங்கிணைப்பு தவிர்ந்த ஓர் கொடுக்கல் வாங்கலில் ஓர் சொத்து அல்லது பொறுப்பில் ஆரம்ப ஏற்பிசைவுகளிலிருந்து ஏற்படுமாயின் பிற்போடப்பட்ட வரி கணக்கீடு செய்யப்பட மாட்டாது. அறிக்கையிடற் காலப்பகுதியின் முடிவுத் திகதியில் சட்டவாக்கமாக்கப்பட்ட வரி வீதத்தை பயன்படுத்துவதன் மூலமும் தொடர்புபட்ட பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் தேறுகையில் பிரயோகிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகையில் அல்லது பிற்போடப்பட்ட வருமான வரிப்பொறுப்பு தீர்க்கப்படுகையில் பிற்போடப்பட்ட வரி நிர்ணயிக்கப்படுகின்றது.

தற்காலிக வேறுபாடுகள் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு எதிராக உள்ள எதிர்கால வரி இலாபத்திற்கு சாத்தயமாக உள்ள தொகை வரை மாத்திரமே பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

தொடர்புபட்ட பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் வருமான வரிகள் விதித்த அதே வரி அதிகாரியுடன் தொடர்புபடுகையில் நடைமுறை வரிச் சொத்துக்கள் நடைமுறை வரிப் பொறுப்புக்களுக்கு ஏதிராக எதிரீடு செய்யப்படுவதற்காக ஓர் சட்ட அமுலாக்கம் இருக்குமாயின் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகை ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு போதிய வரி இலாபம் சகல அல்லது பகுதியளவிலான பிற்போடப்பட்ட வரிச்சொத்து பயன்படுத்துவதற்கு அனுமதிப்பதற்குச் சாத்தியமல்லாத வரைக்கும் குறைக்கப்படுகின்றது. ஏற்பிசைவு செய்யப்படாத பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியின் போதும் மீள் மதிப்பிடப்பட்டு அறவிடப்பட உள்ள பிற்பொடப்பட்ட வரிச் சொத்து அனுமதிக்கும் எதிர்கால வரி இலாபங்களுக்குச் சாத்தியமான வரையான அளவிற்கு ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஓர் பிற்போடப்பட்ட வரிச் சொத்து பயன்படுத்தப்படாத வரி இழப்புக்கள், வரிக் கடன்கள் மற்றும் பயன்படுத்தக் கூடிய அளவிற்கு எதிராக கிடைக்கப்பெற்ற எதிர்கால வரிப் பொறுப்புக்களுக்குச் சாத்தியமான அளவு வரையான கழிக்கப்படக் கூடிய தற்காலிக வேறுபாடுகளில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடற் திகதிக்கும் மீளாய்வு செய்யப்பட்டு தொடர்புபட்ட வரி நலன்கள் தேறும் வரையில் தற்போது சாத்தியப்படாத அளவிற்குக் குறைக்கப்படும்.

**3.14 ஊழியர் நலன்கள்**

கம்பனி விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள் ஆகிய இரண்டையும் கொண்டுள்ளது.

**3.14.1 விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்**

பின் - ஊழிய நலன் திட்டத்தின் கீழ் வேறான ஓர் நிறுவகத்திற்கு நிலையான பங்களிப்புக்களைச் செலுத்துமாயின் இது விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் ஆகும். எதிர்காலப் பங்களிப்பை மேற்கொள்வதற்கு கம்பனியானது சட்ட அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடுகளைக் கொண்டமையவில்லை. விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களின் பங்களிப்பக்களுக்கான கடப்பாடுகள் ஊழியர்களால் சேவகள் வழங்கப்பட்ட காலப்பகுதியிலான வருமானக் கூற்றில் ஓர் ஊழிய நலன் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**3.14.2 ஊழியர் சேமலாப நிதியம்**

இலங்கை மத்திய வங்கியால் முகாமைத்துவம் செய்யப்படும் சேமலாப நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்தின் 15% ஐயும் 10% ஐயும் கம்பனியும் ஊழியர்களளும் பங்களிப்புச் செய்கின்றன.

**3.14.3 ஊழியர் நம்பிக்கை நிதியம்**

இலங்கை மத்திய வங்கியால் முகாமைத்துவம் செய்யப்படும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்தின் 3மூ ஐ கம்பனி தொகுதி பங்களிப்புச் செய்கின்றது. விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்புக்கள் ஏற்கப்பட்டவாறு வருமானக் கூற்றில் ஓர் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**3.14.4 வாந்துரைக்கப்பட்ட நலன் திட்டம்**

ஓர் விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டமானது விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் தவிர்ந்த பின் - ஊழியர் நலன் திட்டமாகும். கம்பனி 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் கொடுப்பனவின் கீழான நலன்களை மேற்கொள்வதற்கு பொறுப்புடையதாகும். விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டங்கள் தொடர்பான நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட பொறுப்பு அறிக்கையிடற் திகதியில் உள்ளவாறான விதந்துரைக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாகும். திட்டமிடப்பட்ட அலகுக் கடன் (ரூஊ) முறை டுமுயுளு 19 – ''ஊழியர் நலன்'' ஆல் பரிந்துரைக்கப்பட்ட முறையைப் பயன்படுத்தியே அறிக்கயிடற் திகதியில் உள்ளவாறான தகைமை உடைய பதிவாளர் மூலம் சிதந்துரைக்கப்பட்ட நலன் கடப்பாடு கணிக்கப்படுகின்றது. இத்தகைய உள்ளபடியான பெறுமதிகள் ஆண்டிற்கு ஒரு முறை மேற்கொள்ளப்படுகின்றன.

உள்ளபடியான எடுகோள்களின் மாற்றங்கள் மற்றும் ஏற்கப்பட்ட தகைமை பெற்ற சீராக்கங்களிலிருந்து உருவாகும் உள்ளபடியான இலாபங்களும் நட்டங்களும் அவை உருவான காலத்தின் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஊழியர்களின் நலன்கள் தொடர்பான கம்பனி கடப்பாடுகளைக் கணிப்பிடுகையில் ஏற்படும் உண்மையான மதிப்பீட்டிலிருந்து எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டங்கள் ஏனைய விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் தொடர்புபட்ட பதவியணி கிரயமும் ஏனைய கிரயமும் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஊழியர்களின் ஓய்வூதிய நலன்கள் மீது எழும் கம்பனியின் பொறுப்பு வெளியில் இருந்து நிதியிடப்படுவதில்லை.

### 3.14.5 குறுங்கால ஊழிய நலன்

ஊழியர்களால் வழங்கப்படும் தொடர்புபட்ட சேவைகளுக்கான செலுத்தப்பட வேண்டிய ஓர் கழிவு செய்யப்படாத தொகை மீது குறுங்கால ஊழியர் நலக் கடப்பாடுகள் அளவிடப்படுகின்றன.

### 3.15 ஏற்பாடுகளும் நிகழத்தக்க பொறுப்புக்களும்

முன்னை யசம்பவத்தின் விளைவாக தற்போதைய சட்ட அல்லது ஆக்கபூர்வமான கடப்பாட்டை கம்பனி கொண்டு தொகைகள் நம்பகரமான முறையில் மதிடப்பட்டு கடப்பாடுகள் தீர்க்கப்படுவதற்கு கம்பனியிலிருந்து பொருளாதார மூலங்களின் வெளிப்பாய்ச்சலுக்கான சாத்தியம் இருக்கையில் செயற்பாட்டுச் செலவினங்களுக்கான ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

